உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 2 திங்கட்கிழமை (16–03–1998) UTHAYAN– A Lively National Tamil Daily கதிர்: 93

# வாஜ்பாய் பிரதமராக வியாழன் பதவி ஏற்பு

## 10 நாள்களில் நம்பிக்கை வாக்கெடுப்பு



புதுடில்லி, மார்ச் 16

இந்தியாவின் 12 ஆவது நாடாளுமன்றத்தின் பிரதமராக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாய் எதிர்வரும் வியாழக்கிழமை பதவி ஏற்கின்றார்.

நேற்று இரவு ஜனாதிபதி கே. ஆர். நாராயணனை அவர் சந்தித்து சுமார் 50 நிமிட நேரம் பேசினார்.

அப்பொழுதே புதிய அரசு அமைக்குமாறு வாஜ்பாயை ஜனாதிபதி கோரினார்.

பதவி ஏற்று 10 நாள்களில் தமது பெரும்பான்மையை நம்பிக்கை வாக்கெடுப்பு மூலம் வாஜ்பாய் நிரூபிக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் எந்தக் கட்சியாவது அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறியதால் புதிய அரசு அமைப்பதில் இழுபறி நிலை இருந்து வந்தது தெரிந்ததே.

தமிழ் நாட்டில் அ. தி. மு. கவும் அதன் தோழமைக் கட்சிகளும் பாரதீய ஜனதா அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் கடிதங்களை வழங்க மறுத்ததால் நிலைமை மேலும் சிக்கலடைந்திருந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரிப் பகுதியில் விமானத் தாக்கு!

பூநகரிப் பகுதியில் விமானப்படையின் விமானங்கள் நேற்றுக்காலை மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் ஒரு பொதுமகன் உயிரிழந்தார். மற்றும் ஒருவர் காயம் அடைந்தார் என்று புலிகளின் குரல் தெரிவித்தது.

வான்படையின் இரு ''கிபிர்'' குண்டுவீச்சு விமானங்களும், எம். ஐ. 24 ரக ஹெலிகளும் பரவலாக தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதல்களில் பல வீடுகளும் சேதமடைந்தன.

(இ-3)

## புலி உறுப்பினர் சடலம் இன்று வன்னி செல்கிறது

வவுனியா, மார்ச் 16

கடந்த 11 ஆம் திகதி திருகோணமலைத்துறை முகப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் அமைப்பு உறுப்பினர் ஒருவரின் சடலம் இன்று வன்னிக்கு எடுத்துச் செல்லப்பட்டு விடுதலைப் புலிகளிடம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் ஒருவர் பலியானார் பல அதிகாரிகள் காயம்

வவுனியா, மார்ச் 16

மாங்குளம் நகரைக் கைப்பற்ற ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையில் ஆட்லறி றெஜிமென்ட் மேஜர் பிரியாந்த ரணசிங்க உயிரிழந்தார். மூன்று பிரிகேடியர்கள் உட்பட 6 அதிகாரிகள் காயம் அடைந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு அமைக்கும் முயற்சி: காங்கிரஸ் கைவிட்டது!

## சோனியா நேற்று அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 16

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி சோனியாகாந்தி நேற்று ஜனாதிபதி கே. ஆர். நாராயணனை அவரது மாளிகையில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு 40 நிமிடம் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் சோனியா பேசினார், காங்கிரஸ் கட்சிக்கு போதுமான அளவு மக்களவை உறுப்பினர்கள் இல்லாததால் ஆட்சி அமைப்பதற்கான உரிமையைக் கோரப்போவதில்லை என்று ஜனாதிபதியிடம் தாம் தெரிவித்ததாக சோனியா கூறினார்.

முன்னதாக காங்கிரஸ் செயற்குழு சோனியா காந்தியின் இல்லத்தில் கூடி தற்போதைய 'அரசியல் நிலைவரம் குறித்து விவாதித்தது.

(இ-9)

# மாங்குளம் பகுதியில் கடும்சமர் மூண்டது!

## 3 முனைகளால் நகர படையினர் முயற்சி

வவுனியா, மார்ச் 16

மாங்குளம் நகரைக் கைப்பற்ற மூன்று முனைகளால் முன்னேற முயலும் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உக்கிர சண்டை நடைபெறுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் காலை ஆரம்பமான படையினரின் முன்னேற்ற முயற்சியைதடுக்கும் வகையில் விடுதலைப் புலிகள் மோட்டார்கள், பீரங்கிகள் கொண்டு தாக்குதல்களை நடத்தி வருவதாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 5 படையினர் சடலங்கள் புலிகளால் ஒப்படைப்பு

வவுனியா, மார்ச் 16

மாங்குளம் நகரைக் கைப்பற்றும் நோக்குடன் முன்னேற முயலும் படையினருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஐந்து படையினரின் சடலங்கள் நேற்று மாலை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் படை அதிகாரிகளிடம் ஒப்

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் மேலும் இருவர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 16

மருதானை குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பில் மேலும் இரு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏறாவூரிலுள்ள கராஜ் ஒன்றில் இவர்கள் வேலை செய்து வந்தனர்.

கைதான இருவரும் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(இ-21)

## எழுவை தீவு கடலில் தாக்குதல்

கொழும்பு, மார்ச் 16

எழுவைதீவுக்குக்கிழக்கே இரண்டு பேருடன் சென்றுகொண்டிருந்த வள்ளம்ஒன்று கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலால் முற்றாக அழிக்கப்பட்டதாகபாது

( 10ஆம் பக்கம் பார்க்க)

# பாரதீய ஜனதா அரசில் அ.தி.மு.க. நேரடியாகபங்கு

## முன்னைய முடிவில் மாற்றம்

புதுடில்லி, மார்ச் 16

அ. தி. மு. க, பாட்டாளி மக்கள் கட்சி, தமிழக ராஜீவ் காங்கிரஸ் ஆகியவை மத்தியில் அமையக் கூடிய பாரதீய ஜனதா அரசில் பங்கேற்கும் என்று செல்வி ஜெயலலிதா நேற்று அறிவித்தார்.

பாரதீய ஜனதாவின் முக்கிய தலைவரும் முன்னாள் மத்திய நிதி அமைச்சருமான ஜஸ்வர் சிங்குடன் நேற்று சென்னையில் ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் ஜெயலலிதா இதனைத் தெரிவித்தார்.

வாஜ்பாய் பதவி ஏற்பு நிகழ்ச்சியில் தாம் கலந்து

( 10 ஆம் பக்கம் பார்க்க )

# பொலீஸ் கான்ஸ்டபிள் நையப்புடைக்கப்பட்டார்

## அத்துமீறியதாக தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

இரவு வேளையில் மது போதையில் வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து சிலரைத் தாக்கிவிட்டுப் பெண் ஒருவரைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்த முனைந்ததாகக் கூறப்படும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அயலவரால் வளைத்துப் பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டார்.

திருநெல்வேலி கிழக்கில் பாற்பண்ணைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலுக்குஎடுத்துவரப்பட்ட பஸ்களில்40இங்குசேவைக்கு

## காங்கேசனில் கையளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். உள்ளூராட்சித் தேர்தல் பணிகளுக்கு எடுத்து வரப்பட்ட 97 பஸ்களில் தரமான, நல்ல நிலையில் உள்ள 40 பஸ்கள் வட பிராந்திய போக்குவரத்துச் சபையிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

இந்த பஸ்களைக் கையளிக்கும் வைபவம் காங்கே

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மங்கையர்க்கரசி கனகசுந்தரம்

மாதகலைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளை, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மங்கையர்க்கரசி கனகசுந்தரம் 15 - 3 - 1998 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவேலுப்பிள்ளை—நாகம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சடாசிவம், சற்குணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிரமணியம் (உரிமையாளர், துர்க்கா மில், மானிப்பாய்) அவர்களின் பாசமிகு தாயாரும், விக்னேஸ்வரியின் அன்பு மாமியாரும், வரதன் (U. K.) கல்பனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-3-98) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பாலசுப்பிரமணியம்
(மகன்)

உதவி அரசாங்க அதிபர்
பணிமனை முன்பாக,
சண்டிலிப்பாய்.

(சி/3128)

## வீரவாகு தம்பிராசா

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு தம்பிராசா அவர்கள் 14-03-98 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், சிவலோகநாதன் (ஹொலன்ட்), சத்தியநாதன், கமலாதேவி, காலஞ்சென்ற சறோஜினிதேவி, ருக்குமணிதேவி (ஜேர்மனி), அருள்தேவி (வவுனியா), பவளராணி, தர்மராஜா (ஜேர்மனி), குணபூஷணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முத்துராணி (ஹொலன்ட்), யோகானந்தராணி, நவரட்ணம், திலகராஜா, சுப்பிரமணியம் (ஜேர்மனி), தயானந்தன் (வவுனியா), ஆனந்தகுமார், சுஜாதா (ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15-03-98) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கற்புலம்,
உரும்பிராய் கிழக்கு.

(54104)

நீர்வேலி

## சோமசுந்தரம் வித்துவசிங்கம்

(பிரபல திருமணத் தரகர்)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடியை வதிவிடமாகக் கொண்ட சோமசுந்தரம் வித்துவசிங்கம் 15-03-98 காலை 6-00 மணியளவில் சுழிபுரத்தில் இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:
திருமதி வி. கமலாம்பிகை
(மனைவி)

சுழிபுரம் மேற்கு.

(54099)

## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

(முன்னாள் காவலாளி, அச்சுவேலி மகா வித்தியாலயம்)

அச்சுவேலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் 15 - 03 - 98 இல் காலமானார்.

அன்னார் இராசேஸ்வரியின் அன்புக்கணவரும், இராஜகுலநாயகி (கண்டி), தெய்வகுலநாயகி (வவுனியா), சுகுமார் (சுவிஸ்), வசந்தராணி (பின்லாந்து), மஞ்சுளா (அச்சுவேலி), உதயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், துரைராசா (கனடா), கதிரவேலு (கொழும்பு), செல்லத்துரை (வவுனியா) ஆகியோரின் சகோதரரும், சிவபாலசிங்கம் (மிருக வைத்திய நிபுனர், நாவலப்பிட்டி), சத்தியநாதன் (வவுனியா), புஸ்பராணி (லண்டன்), தனபாலசிங்கம் (பின்லாந்து), மகாதேவன் ஆகியோரின் மாமனாரும், அபிரா, துவாரகன் (கண்டி), பாமினி, பிரசன்னா, யாழினி, ஜெயமதி (வவுனியா), சிந்துஜா (லண்டன்), ஜெயகஜன், நிருபனா, நிரோஜன், ஜெயதீபன் (பின்லாந்து), மருதாளினி, மயூரதரன் (அச்சுவேலி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. மகாதேவன்
(மருமகன்)

இராசா வீதி,
அச்சுவேலி.

(54101)

## வவுனியாவில் ஜே.வி.பி. சுவரொட்டி

வவுனியா, மார்ச் 16

வவுனியாவில் என்றும் இல்லாத அளவில் அதிக அளவான ஜே. வி. பியினரின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

''அவர்களும் ஒன்று; இவர்களும் ஒன்று; நாங்கள் மட்டும் மக்கள் விடுதலை முன்னணியினருடன்'' என்ற வாசகங்கள் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன.

அவற்றைப் பார்த்து வவுனியாப் பகுதி மக்களிடம் மனக்கிலேசம் ஏற்பட்டுள்ளதாக வவுனியா செய்தி ஒன்று தெரிவித்தது. (ஐ-164-9)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

திங்கள், செவ்வாய்
பிரசாந்த் - மதுபாலா
நடித்த
**செந்தமிழ்ச் செல்வன்**

புதன், வியாழன்
விஜய் - சிவாஜி நடித்த
**ஒன்ஸ்மோர்**

வெள்ளிக்கிழமை
M. G. R. நடித்த
**மாட்டுக்காரவேலன்**

நேரம்:- **10-30, 2-30**

(54075)

யாழ்.

## றீகல் வெண் திரையில்

91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

25 அடி அகலத் திரையில்

இன்று முதல்
அஜித்குமார் - மானு
நடித்த
**காதல் மன்னன்**

தினசரி:- **10-30, 2-30**
(பழைய நேரப்படி)

(54105)

## பண்ணிசை வகுப்புகள்

சுன்னாகம், மார்ச் 16

இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழகம் பண்ணிசை, மிருதங்கம், நடன வகுப்புக்களை நடத்தவுள்ளது.

இதில் கலந்துகொள்ள விரும்புவோர் செயலாளர் தே. திருமுருகராஜனுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வளன்புரம், கொழும்புத்துறை

## புனித சூசையப்பர் ஆலயம்

## பெருவிழா - 19-03-98

16-03-98 முதல் 18-03-98 வரை ஆயத்த ஆராதனை வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு (புதிய நேரம்)

19-03-98 காலை 6.45 மணிக்கு திருநாள் கூட்டுப்பலியும், சிறுவருக்கான முதல் நன்மை வழங்கும் சடங்கும் புனிதரின் திருச் சொரூப பவனியும், ஆசீரும் இடம்பெறும்.

புனிதரின் அருளாசி பெற அனைவரையும் அழைக்கின்றோம்.

அருட்திரு. சாள்ஸ் கொலின்ஸ்,
பங்குத்தந்தையும்,
புனித சூசையப்பர் குருமட
குழாமும், பங்குமக்களும்.

[54077]

## வாழ்த்துகின்றோம்

## சென். பற்றிக்ஸ் கல்லூரி

நாளை (17-03-98)

பாதுகாவலர் தினத்தையும்
பாடசாலைத் தினத்தையும்

கொண்டாடும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

— பழைய மாணவர் சங்கம்.

குறிப்புகள்:

★ 17-03-98 காலை 7.30 மணிக்கு கல்லூரி ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியிலும், தொடரும் நிகழ்வுகளிலும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் தங்கள் துணைவியர் சகிதம் கலந்து கொள்ளுமாறு அதிபரால் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

★ 22-03-98 ஞாயிறு நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும் மதிய உணவுடன் கூடிய ஒன்று கூடலில் கலந்து கொள்ள விரும்பும் பழைய மாணவர்கள், அலுவலகத்துடன் அல்லது செயற்குழு உறுப்பினருடன் தொடர்பு கொள்ளவும்.

59, சென். பற்றிக்ஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

-செயலாளர்

(54103)

## கல்வித்திணைக்களம் யாழ்.வலயம் - 2

## முறைசாராக் கல்வி தொழிற்றிறன் அபிவிருத்திப் பயிற்சி-1998

## மாணவர்களுக்கான நேர்முகத் தேர்வு

1998 ஆம் ஆண்டுக்கான முறைசாராக் கல்விப் பயிற்சி நெறிகள் 20-03-1998 இல் ஆரம்பமாக உள்ளன. கீழ்வரும் பயிற்சி நெறிகளுக்கும் பயிற்சி நிலையங்களுக்கும் விண்ணப்பித்த மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை கீழ்க்காணும் அட்டவணைக்கு அமைய நடைபெற உள்ளது. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பாடசாலை விடுகைப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் (மூலப் பிரதி), கல்விச் சான்றிதழ் (மூலப்பிரதிகள்) களுடன் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்:

| கோட்டம் | நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடம்/ கற்கை நிலையம் | கற்கைநெறி | திகதி | நேரம் |
|---|---|---|---|---|
| பருத்தித்துறை | யா/வட இந்து மகளிர் கல்லூரி | தமிழ் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் | 17-03-98 | 10-00 a.m |
| | யா/வல்வை மகளிர் கல்லூரி | தமிழ் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் | 17-03-98 | 1-00 p.m |
| கரவெட்டி | யா/தொண்டமானாறு வீரகத்தி ம. வி. | தும்புத் தொழினுட்பம் | 19-03-98 | 1-00 p.m |
| | யா/திருஇருதயக் கல்லூரி | மனை முகாமைத்துவம் | 18-03-98 | 10-00 a.m |
| | யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி | வானொலி பேணல் | 18-03-98 | 1-00 p.m |
| கோப்பாய் | யா/அச்சுவேலி சென். திரேசா கல்லூரி | மனை முகாமைத்துவம் | 19-03-98 | 10-00 a.m |
| | யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | வானொலி பேணல் | 19-03-98 | 1-00 p.m |

யா/தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு விண்ணப்பித்த மாணவர்கள், யா/திரு இருதய கல்லூரிக்கு 18-03-1998 அன்று 10-00 மணிக்கு தேவையான ஆவணங்களுடன் தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

திரு. சி. சிவராஜா,
கல்விப் பணிப்பாளர்,
யாழ். வலயம் - 2.

13-03-1998

(54102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதாம் ஹுசேய்ன் யுத்தக் குற்றவாளி;

# அமெரிக்க செனற்சபை பிரகடனம்!



நியூயோர்க், மார்ச் 16

ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்னை ஒரு யுத்தக் குற்றவாளி எனப் பிரகடனப் படுத்தும் தீர்மானம் ஒன்றை அமெரிக்க செனற் சபை நிறைவேற்றியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப்படும் சர்வதேச நீதிமன்றம் ஒன்றில் அவர் விசாரணை செய்யப்படவேண்டும் என்று செனற்றின் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமானம், ஜனநாயகம் ஆகியவற்றுக்கு எதிராகச் செயற்பட்டு இனப்படுகொலையையும், சர்வதேச சட்டவிதிகளை அத்து மீறும் செயல்களையும் புரிந்த ஏனைய ஈராக்கிய அதிகாரிகளும் இந்த நீதிமன்றில் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் என்றும் அத் தீர்மானம் தெரிவிக்கிறது.

சதாம் ஹுசேய்ன் மீது குற்றஞ்சாட்டி, விசாரணை நடத்தி சிறைக்கு அனுப்ப விசேட நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும் என்று ஐ. நா. சபையை இத் தீர்மானம் கேட்டுள்ளது.

சதாம் ஹுசேய்ன் யுத்தக் குற்றவாளி எனப் பிரகடனப்படுத்தப்பட்டால் அவருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதற்கு அது தமக்கு உற்சாகமளிக்கும் என்று அமெரிக்க செனற்றர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(ஐ)

## மணிசங்கர ஐயர் காங்கிரஸில்!

காங்கிரஸ் கட்சியில் இருந்து தேர்தலுக்கு முன் விலகிய மணிசங்கர ஐயர் மீண்டும் காங்கிரஸில் சேர்ந்து விட்டார்.

காங்கிரஸில் இருந்து விலகி திரிநமுல் காங்கிரஸில் சேர்ந்த மணிசங்கர ஐயர் அக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படாததை அடுத்து அவர் மயிலாடு துறைப்பகுதியில் சுயேச்சையாகப்போட்டியிட்டார்.

காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை சோனியாகாந்தி ஏற்றிருப்பதை அடுத்து தமது தாய்க் கட்சியில் தாம் மீண்டும் சேர்ந்துள்ளதாக ஐயர் தெரிவித்தார். (ஐ)

உலக அரங்கில்

## யெல்ட்சின் சுகயீனம்

மொஸ்கோ, மார்ச் 16

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் மீண்டும் சுவாசத் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்.

நேற்று முன்தினம் அவரது நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தொண்டைப் புண், தொண்டை கரகரப்பு காரணமாக அவருக்கு கிருமித்தொற்றை தடுக்கும் மருந்துகள் வழங்கப்பட்டிருப்பதாக கிரெம்ளின் தெரிவித்தது.

கடந்த ஆண்டு நுரையீரல் வீக்கம் மற்றும் அதற்கு முன்னர் நிமோனியா இருதய அறுவைச் சிகிச்சை எனஅதிபர் யெல்ட்சின் தொடர்ச்சியாக உடல் உபாதைகளால்பாதிக்கப்பட்டார்.

(ஐ)

## "பாத்பைண்டர்" செயலிழந்தது!

லொஸ் ஏஞ்சல்ஸ், மார்ச் 16

செவ்வாய்க்கிரகத்தைஆராயநாஸா விஞ்ஞானிகளால் அனுப்பப்பட்ட 'பாத்பைண்டர்' விண்கலம் செயலிழந்து விட்டதாக நாஸா விஞ்ஞானிகள் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளனர்.

பாத்பைண்டரின் சமிக்ஞைக்காக விஞ்ஞானிகள் கடந்த 5 மாதங்களாகக் காத்திருந்தனர்.

நாஸா விஞ்ஞானி பென்டே யோகிமா கடைசி முயற்சியாக செவ்வாய்க்கிழமை பாத்பைண்டருடனான தொடர்புக்கு மூன்று மணி நேரத்துக்கும் மேலாக முயன்றார். ஆனால் முயற்சி பலனளிக்கவில்லை. அவருடைய கம்பியூட்டர் திரையில் ஒரு ஒளிப்புள்ளி தோன்றி மறைந்தது. இதையடுத்து "பாத்பைண்டர்" கலத்துடனான தொடர்பு முற்றாக அறுபட்டு விட்டதாகவும் கலம் செயலிழந்து விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஜூலை 4 ஆம் தேதி 'பாத்பைண்டர்' செவ்வாய்க்கிரகத்தில் இறங்கியது. கிரகத்தின்செந்நிற மேற்பரப்பு மற்றும் பாறைகள்குறித்த பல தகவல்களை அனுப்பியது. தினசரி கால நிலை அறிக்கையையும் பூமிக்கு அனுப்பியது.

இதனுடன் உள்ள குட்டி ரோபோவான "சோர்ஜர்னர்" செவ்வாய்க்கிரகத்தில் 90 மீற்றர் வரை உருண்டு சென்று பல்வேறு ஆய்வுகளை நடத்தியது. தன்னிடமிருந்த கமரா மூலம் கிரகத்தின் மேற்பரப்பைப் படம் பிடித்தது. 500–க்கும்மேற்பட்ட படங்களை இது அனுப்பியுள்ளது. செவ்வாய்க்கிரகம் பற்றிய பல்வேறு ஆய்வுகளுக்கு இது மிகப் பயனுள்ளதாக இருந்து வருகிறது. (ஐ)

# இந்திய தூதரக அதிகாரியை பாகிஸ்தான் வெளியேற்றியது!

## இந்தியாவும் பதில் நடவடிக்கை

இஸ்லாமாபாத், மார்ச் 16

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தில் "வீஸா" அதிகாரியாகக் கடமையாற்றும் பீ. என். நாயரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு பாகிஸ்தான் உத்தரவிட்டுள்ளது.

உளவு மற்றும் விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டதாக நாயர் மீது குற்றஞ் சுமத்தி 72 மணிநேரத்துக்குள் நாட்டை விட்டு வெளியேறி விடுமாறு பாகிஸ்தான் நேற்று முன்தினம் உத்தரவிட்டது

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையை கண்டித்த இந்தியா பதில் நடவடிக்கையாக புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவரை நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது.

ஹமீதுல்லா கான் என்ற அந்த அதிகாரி தமது ராஜீகத்துறை நிலைக்குப் பொருத்தமற்ற நடவடிக்கையில் ஈடுபட்டார் எனத் தெரிவித்து 48 மணி நேரத்தினுள் நாட்டை விட்டு வெளியேறுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சு உத்தரவிட்டது.

(ஐ)

## ஈரானில் பூகம்பம்

ஈரானின் தென்கிழக்கு நகரான ஹெர்மானை கடும் பூகம்பம் தாக்கியுள்ளது. ரிச்டர் அளவு கோலில் 6. 9 எனப்பதிவாகிய இந்த நில நடுக்கம் நள்ளிரவு வேளை ஏற்பட்டது.

5 பேர் பலியானதாகவும் 15பேர்காயமடைந்ததாகவும் முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(ஐ)

## 50 லட்சம் கைதிகளுக்கு மன்னிப்பு

தென் கொரியாவின் புதிய அதிபர் கிம் டே யங் பல்வேறு குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த 50 லட்சம் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கியிருக்கிறார்.

இவர்களில் பெரும்பாலானோர் வீதி ஒழுங்கை மீறியது போன்ற சிறுகுற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்களாவர். (ஐ)

# புதிய அமைச்சரவையில் சுஹார்ட்டோவின் மூத்தமகள்

ஜகார்த்தா, மார்ச் 16

கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சிக்கியுள்ள இந்தோனேசியாவில் அதிபர் சுஹார்ட்டோ தமது புதிய அமைச்சரவையை அறிவித்துள்ளார்.

தனது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தனக்கு மிக நெருக்கமான நண்பர்கள் உட்பட புதியவர்களை அமைச்சரவையில் சேர்த்துள்ளார்.

அமைச்சரவை உறுப்பினர்களில் பெரும்பாலானோர் சுஹார்ட்டோவிற்கும், அவரது கோல்கார் கட்சிக்கும் விசுவாசமானவர்கள் ஆவர்.

சுஹார்ட்டோவின் மூத்த புதல்வியும் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளார்.

7 ஆவது பதவிக்காலத்துக்கு அதிபராக பதவியேற்ற சுஹார்ட்டோ நாட்டின் பொருளாதாரத்தை அதல பாதாளத்தில் இருந்து மீட்க வேண்டியுள்ளது. ஆனால் அவர் நியமித்துள்ள அமைச்சர்கள் பொருளாதார நிர்வாகத்தில் கொண்டுள்ள திறமைகளை விடவும் அதிபருக்கு விசுவாசம் காட்டுவதிலேயே தீவிரமான ஈடுபாடுடையவர்களாக இருப்பார்கள் என சில அவதானிகள் கருதுகின்றனர்.

(ஐ)

## கோவையில் குண்டு!

கோயம்புத்தூர், மார்ச் 16

கோயம்புத்தூர்ப் பகுதியில் வழிபாட்டுத்தலம் ஒன்றில் இருந்து சக்தி மிக்க பெட்டி வெடிகுண்டு ஒன்றை நேற்று முன்தினம் பொலீஸார் மீட்டுள்ளனர்.

கோயம்புத்தூர்ப் பகுதியில் தொடர்ந்து பொலீஸார் மேற்கொண்டுவரும் தேடுதல் நடவடிக்கையின் போதே இக் குண்டு மீட்கப்பட்டது.

## திரையுலகப் பிரமுகர்கள் 32 பேருக்கு பாதுகாப்பு

சென்னை, மார்ச் 16

திரை உலகைச் சேர்ந்த நடிகர், நடிகைகள் இயக்குநர்கள் உட்பட 32பேருடைய வீடுகளுக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கோவையில் நடந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்தும், தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட திரையுலகைச் சேர்ந்த சிலருக்கு வந்த கொலை மிரட்டலை அடுத்தும் இப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை மாநகரப் பொலீஸ் ஆணையாளர் பி. காளிமுத்து கூறியதாவது:

நடிகர்கள் ரஜினிகாந்த், கமலஹாசன், எஸ். வி. சேகர், இயக்குநர் மணிரத்னம், நடிகைகள் விஜயசாந்தி, கௌதமி, ரேவதி உட்பட 32 பேருக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொடுக்கப்பட்டுள்ள இப்பாதுகாப்பு தற்காலிகமானது. சம்பந்தப்பட்டவர்கள் கேட்காமலேயே பாதுகாப்பு தரப்பட்டுள்ளது.

மிரட்டல் வந்துள்ளதாகவும் பாதுகாப்பு வேண்டும் என்றும் வேறு யாராவது கேட்டால் அதுபற்றி முதலில் விசாரணை நடத்தப்படும். மிரட்டல் உண்மையானதுதான் என்று தெரிய வந்தால் பணியில் உள்ள பொலீஸாரின் எண்ணிக்கையைப் பொறுத்து அவர்களுக்குப் பாதுகாப்புத் தரப்படும்.

மிரட்டல் வந்துள்ளதாகக் கூறி பாதுகாப்பு வேண்டும் என்று யாராவது பொய்ப் புகார் கொடுத்தால் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் காளிமுத்து.

(ஐ-10)

# 83 ஜூலை இனக்கலவரம் போன்று இனிமேல் நிகழ வாய்ப்பில்லையாம்!

## இந்திய சோதிடர்கள் ஆரூடம்

சென்னை, மார்ச் 16

இலங்கையில் சிக்கல் நிலையை அடைந்துள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் தொடர்ந்து நடக்கும் யுத்தம் போன்றவை குறித்த ஆரூடங்களை தமிழ் நாட்டைச் சேர்ந்த இரு சோதிடர்கள் வெளியிட்டுள்ளனர்.

"நம்புங்கள்" நாராயணன் என்ற பிரபல சோதிடர் தெரிவித்திருப்பதாவது:

இந்த மார்ச் மாதத்தில் ஐந்து கிரகங்கள் கும்பராசியில் சேர்க்கை பெறுகின்றன. இது உலகம் முழுவதும் பதற்றநிலையை உருவாக்கும். இலங்கையிலும் கூடப் பதற்றநிலை உருவாகும். ஆனால், பெரிய அளவிலான வன்முறைகள் அங்கு இடம்பெறமாட்டா. இத்தகைய (பதற்ற) நிலை சிற்சில இடங்களில் மட்டும் காணப்படும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 1983 இல் இடம் பெற்றது போன்ற இனக்கலவரம் இடம்பெறமாட்டாது.

வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 1998 — 1999 காலப் பகுதி பெருமளவுக்கு சாதகமாக இருக்க மாட்டாது. அவரது நட்சத்திரம்கேட்டை மேலும், சனி அட்டமத்தில் இருக்கிறது. சனி எட்டாம் வீட்டில் இருந்து கொண்டு மேடத்தைப் பார்க்கிறது. அவரது இராசி விருட்சிகம். இதனால் அவர் சுமார் இரண்டரை வருட காலத்துக்கு மிகவும் பிரதிகூலமான காலத்தை எதிர் நோக்க நேரும் அதேவேளையில், குரு (வியாழன்) கர்க்கடகத்தில் இருப்பதால் அவருக்கு மக்கள் ஆதரவு இருக்கும்.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்கும் ஒக்ரோபர் மாதத்துக்குமிடையில் நடைபெறக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. இந்தப் பேச்சுகளின் போது 80 சதவீத வெற்றியைப் பெறக்கூடிய வாய்ப்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு

# அதிகரித்த சம்பளம் விரைவில் கிட்டும்

## யாழ். வந்த சபை அதிகாரி தகவல்

கோண்டாவில், மார்ச் 16

யாழ். குடாநாட்டில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக 40 புதிய பஸ் வண்டிகள் விரைவில் வழங்கப்படும். வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் 60 வீத சம்பள உயர்வை விரைவில் அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்த்தனவும் சபையின் வேறு இரண்டு அதிகாரிகளும் கடந்த வியாழனன்று யாழ். வருகைதந்தனர்.

கோண்டாவிலில் உள்ள வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளியன்று மாலை அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் கிறிவர்த்தன உரையாற்றினார்.

தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தவென இங்கு எடுத்துவரப்பட்ட பஸ் வண்டிகளில் 43 பஸ்களை வட பிராந்திய போக்குவரத்துச் சேவைக்காக வழங்கப்படுவதாக அவர் அங்கு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் மேலும் 40 புதிய பஸ் வண்டிகள் விரைவில் வழங்கப்படும். நிதி பற்றாக்குறை காரணமாக நிறுத்திவைக்கப்பட்ட ஊழியர்களின் 60 சதவீத சம்பள அதிகரிப்பை கூடிய விரைவில் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகளும், ஊழியர்களும் இந்த வரவேற்புபசாரத்தில்கலந்து கொண்டனர் (ஐ-ரீ)

# யாழ். மருத்துவ பீடத்துக்கு சிங்கள மாணவர்கள்

கொழும்பு, மார் 16

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இணைந்து கற்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 160 சிங்கள மாணவர்களின் விருப்பத்தைக் கோரியுள்ளது.

யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் 125 மாணவர்களுக்கான வெற்றிடம் காணப்பட்டது. அதில் இதுவரை 60 தமிழ் மாணவர்களே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எஞ்சிய வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த தமிழ் மாணவர்கள் இல்லாமையினாலேயே சிங்கள மாணவர்களின் சம்மதம் கோரப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சு கூறியுள்ளது.

யாழ்ப்பாண பாதுகாப்பு நிலைமைகள் தற்பொழுது வழமைக்குத் திரும்பியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளதை அடுத்தே யாழ். மருத்துவ பீடத்திற்குச் செல்ல விரும்பும் சிங்கள மாணவர்களின் விருப்பத்தை அமைச்சு கோரியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதுவரை யாழ். மருத்துவ பீடத்தில் சேர்ந்து கற்க 13 சிங்கள மாணவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (ஐ-10)

# சிறுதானியச் செய்கை வரட்சியால் பாதிப்பு

சாவகச்சேரி, மார்ச் 16

தென்மராட்சிப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் நெல் அறுவடைக்குப் பின்னர் விவசாயிகள் சிறுதானியப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ளனர். ஆனால் தற்போதைய கடும் வெயில் காரணமாக ஏற்பட்டுள்ள வரட்சியால் சிறுதானியங்களின் வளர்ச்சி குன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குளங்களை அண்டியுள்ள விளை நிலங்களில் சிறு தானியங்களைப் பயிரிட்டவர்களது பயிர்கள் ஓரளவு நன்றாக வளர்ந்துள்ளன. சிலர் சிறு தானியங்களுக்குப் பதிலாக வரட்சியைத் தாங்கக் கூடிய சணல் பயிரிட்டுள்ளனர்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 16

தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யூனியன் கல்லூரி மண்டபத்தில் தெல்லிப்பழைக் கோட்டக் கல்வி அலுவலர் ஆ. கமலநாதன் தலைமையில் நடைபெற உள்ளது. இவ் விழாவில் வலயம் II இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா பிரதம விருந்தினராகவும், துர்க்கா துரந்தரி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க தலைவர் சி. சிவமகாராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ் விழாவில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற உள்ளன,

(இ-9)

## கொழும்பு நகரில்

# வாகன நெரிசலை ஏற்படுத்த திட்டமாம்

கொழும்பு, மார்ச் 16

கொழும்பு நகரில் வாகன நெரிசலை ஏற்படுத்தி அதன் மூலம் அரச எதிப்புர் உணர்வை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக புலனாய்வுத்துறை அண்மையில் அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்குப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த ஒருசில அதிகாரிகளின் ஒத்துழைப்பும் உண்டு என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

''லங்காதீப'' பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது,

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வாகன நெரிசலை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு அசௌகரியத்தை உருவாக்குவதன் மூலம் அரசாங்கத்தின் மீது பொதுமக்களை வெறுப்படையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கொழும்பு நகர வாகனப் போக்குவரத்துக் கடமைகளுக்குப்பொறுப்பான இரு அதிகாரிகள் கடந்தவாரம் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என பொலீஸ் தலைமையகம்செய்திகள் தெரிவித்துள்ளன. என்று 'லங்காதீப' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

# 83 ஜூலை இனக்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

கள் காணப்படுகின்றன. இந்தப் பேச்சுவார்த்தைகள் தோல்வியுறும் பட்சத்தில் 1999 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரை யுத்தம் தொடர்ந்து இடம்பெறும்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைப் பொறுத்தவரையில் 1998 ஜூன் மாதத்திலிருந்து 1999 ஜூன் மாதம் வரையான காலப்பகுதி மிகவும் சிரமங்கள் நிறைந்ததாகக் காணப்படும். இந்தக்காலப் பகுதியில் நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகளையும், தனது சுய பாதுகாப்புப் பிரச்சினைகளையும் அதிக அளவில் எதிர்கொள்ள வேண்டி நேரும். ஆதலால், அவர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் இந்தப் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. இவரின் நட்சத்திரம் அவிட்டம். இவர் தற்போது ஏழரைச் சனியின் இரண்டாம் கூறில் இருக்கிறார். வெகுவிரைவில் அவர் மூன்றாம் கூறிற்குச் செல்வார், சனி இவருக்கு அதிகளவு நன்மைகளைப் புரிந்துள்ளது. அதுபொதுவாக தொடர்ந்தும் நன்மையையே செய்யும்.

ஆர். கே. எஸ். முத்து கிருஷ்ணன் என்ற சோதிடர் கூறியுள்ளதாவது:–

பிரபாகரனுக்கு 1998 கூடாத ஆண்டல்ல. ஆனால் 1999 ஆம் ஆண்டு அவருக்கு அனுகூலமற்ற ஆண்டாக இருக்கும்,

அநேக அரசாங்கங்களின் வற்புறுத்தலுக்குஏற்ப உலகின் பலபாகங்களிலுமிருந்து பிரபாகரனுக்கு நிதியுதவி செய்பவர்கள் அவருக்கு உதவி செய்வதைக் குறைத்துக் கொள்வார்கள். இந்த ஆண்டில் பாரதீய ஜனதாக் கட்சி அரசாங்கம் தமிழர்களுக்கு அதிக உரிமைகளை வழங்குமாறு இலங்கை அரசாங்கத்துக்குச் சற்று அழுத்தம் கொடுக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

மே மாதத்திலிருந்து பேச்சுகள் நடைபெறக்கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன. ஆனால் பிரபாகரன் இந்தப் பேச்சுகள் வெற்றி பெறுவதை விரும்பமாட்டாராதலால் இந்தப் பேச்சுகள் தோல்வியில் முடிவடையும்.

பல்வேறு காரணங்களுக்காக 1999 இல் இந்த யுத்தம் போராளிகளுக்கு அதிகளவு அழிவை ஏற்படுத்தும். இவற்றில் ஒரு காரணமாக மாறுபட்ட சர்வதேச சூழ்நிலை அமைந்திருக்கும்.

அதேவேளையில் 2002 ஆம் ஆண்டுக்கு முன்பதாக சோனியாவின் தலைமையின் கீழ் புதுடில்லியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வரும் போது இந்தியா இலங்கையின் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர உதவும்.

இனிமேல் 1983 இல் இடம்பெற்றது போன்ற இனக்கலவரங்கள் இலங்கையில் இடம்பெறவாய்ப்பில்லை.

(ஐ-10)

# முன்பள்ளி போதனைக்கு மாவட்ட மட்டத்தில் பாடத்திட்டம் அவசியம்

## நூல் வெளியீட்டு விழாவில் துணைவேந்தர்

நல்லூர், மார்ச் 16

முன்பள்ளிக் குழந்தைகளுக்கென மாவட்டம் அளாவிய மட்டத்தில் பொதுவான பாடத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். முன்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியருக்கு உகந்த பயிற்சி அளிக்க வேண்டும்; பௌதிக வளங்கள் பேணப்பட வேண்டும். பாலர் கல்வி குறித்த நூல்களும் இன்றியமையாதன.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு வலியுறுத்தினார்.

கலாநிதி சபா. ஜெயராசாவின் ''பாலர் கல்வி ஆசிரியர் கைந்நூல்'' வெளியீட்டு விழா நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் கிறிஸ்தவ ஒன்றியத் தலைவரும் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபருமான சி. தனபாலன் தலைமையில் நடைபெற்றது.

துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

பாலர் கல்வி பற்றிப் பேசுகிறோம். எனினும் அது குறித்து நாம் உரிய கவனம் எடுத்தோமா?

முன்பள்ளிக் குழந்தைகளுக்கென மாவட்டம் அளாவிய பொதுவான பாடத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். ஆசிரியர்களுக்குப் போதிய பயிற்சிகள், பௌதிக வளங்கள் என்பன உரிய முறையில் பேணப்பட வேண்டும்.

வருங்காலத்தில் முன்பள்ளித் தேவை அதிகரிக்கும் என்பதால் பாலர் கல்வி குறித்து சிறந்த நூல்கள் வெளிவர வேண்டும.

சீதனம் குறித்து அடிக்கடி எழுதும் இலக்கிய கர்த்தாக்கள் சிறுவர்கள் பற்றிச் சிந்திக்கவில்லை. பொறுமையைக் கடைப்பிடிக்க வலியுறுத்தும் கிரிஜாம்பாள் கதை தவிர வேறு எதுவும் சிறுவர்களின் நிலைகுறித்து வெளிவரவில்லை.

19 ஆம் நூற்றாண்டில் சாள்ஸ் டிக்கின்ஸின் கதைகள் வந்தபின்தான் குழந்தைகளின் துன்பங்கள் குறைந்தன.

பாலர் பாடசாலை ஆசிரியர்கள் இன்று மிகக்குறைந்த வேதனம் பெறுகிறார்கள். பிள்ளைகளின் சிறப்புக்கு உதவும் இவர்கள் மன வேதனையுடன் வாழும் நிலை தவிர்க்கப்பட வேண்டும். அரசாங்கம் கைவிட்ட நிலையில் உள்ள இவர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களும் தொண்டு நிறுவனங்களும் உதவ வேண்டும். பாலர் பாடசாலை ஆசிரியர்கள் உள்ளூராட்சி மன்றப் பணியாளர்களாகச் சேர்க்கப்பட வேண்டும்— என்றார்.

தென். இந்திய திருச்சபையின் பேராயர் அதிவண. சு. ஜெபநேசன் பேசும்போது கூறியதாவது:

தோட்டத் தொழிலாளர்கள், பெண்கள் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க அமைப்புக்கள் உண்டு. குழந்தைகளின் பிரச்சினைகளை எடுத்துக்காட்ட சபா. ஜெயராசாதான் இருக்கிறார்; குழந்தைகளின் குரலாக அவர் செயற்படுகிறார்.

நமது நாட்டில் புத்தகப் பண்பாட்டை வைத்திருக்கும் ஒரு சிலருக்கு உதவுவது எமது கடமை. மக்கள் பெருக்கம் அதிகரிக்கிறது. ஆனால் நூலாக்கம் குறைந்து வருகிறது. புத்திஜீவிகள் இது பற்றிச் சிந்திக்க வேண்டும். மொண்டசூரி அம்மையார், ரூசோ போன்ற ஞானிகளை தமது பாலர்கல்வி நூலின் மூலம் ஜெயராசா அவர்கள் நமது நாட்டிற்குக் கொண்டு வந்துள்ளார்— என்றார்.

'யுனெஸ்கோ' இணைப்பாளர் கோ. ரி. வேலாயுதம், நூலாசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா ஆகியோரும் பேசினர்.

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத் தலைவர் தனபாலனிடம் இருந்து துணை வேந்தர் பாலசுந்தரம்பிள்ளை நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

(அ-103)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர்
## தம்பிமுத்து நீதிராசா

கொக்குவில் மண்ணின் மைந்தனும்,
கொக்குவில் இந்துவின் பழையமாணவரும்,
கல்லூரியின் வளர்ச்சிக்கு
அரும்பாடுபட்டவரும், முன்னாள்
செனற்றருமானஅமரர் தம்பிமுத்து நீதிராசா
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு
கொக்குவில் இந்து சமூகத்தினர்
மிகுந்த வேதனையடைகின்றனர்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன்,
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள், பெற்றோர்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரி

(சி-3125)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய கலாசாலை அனுமதி பெற்ற மாணவர் கப்பலுக்காகக் காத்திருப்பு

## 24 பேர் குருநகர் வந்தனர்

சுன்னாகம், மார்ச் 16

ஆசிரிய கலாசாலைகளுக்கு அனுமதி பெற்ற மேலும் ஒரு தொகுதி ஆசிரிய மாணவர்கள் குருநகர் வந்துள்ளனர்.

கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளுக்குப் பயிற்சிக்கு வரவென மன்னாரில் 107 மாணவர்கள் கப்பலை எதிர்பார்த்து ஒரு மாதத்துக்கும் மேலாகக் காத்திருந்தனர்.

அவர்களில் 24 பேர் குடாக்கடல் வழியாக கடந்த 28ஆம் திகதி குருநகர் வந்தடைந்து' ஐந்து தினங்களின் பின்னர் அங்கிருந்து கலாசாலை நிர்வாகத்தால் கூட்டிவரப்பட்டனர்.

நேற்று முன்தினம் குருநகர் வந்தடைந்த மேலும் ஒரு தொகுதி ஆசிரிய மாணவர்கள் தம்மை விடுவித்து அழைத்து வருமாறு கோரி, கலாசாலை நிர்வாகத்திற்குக் கடிதம் அனுப்பியுள்ளனர். இதைத் தொடர்ந்து அவர்களை மீட்டு வரும் முயற்சியில் கலாசாலை நிர்வாகம் ஈடுபட்டுவருகிறது.

இதேவேளை — கப்பலை எதிர்பார்த்துப் பெருமளவு ஆசிரிய மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் மன்னாரில் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-27)

## பயணிகள் பாதிப்பு

சுன்னாகம், மார்ச் 16

யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சிக்குச் செல்லும் அரச பஸ் சேவை மாலை 3 மணிக்கும் 4.30 மணிக்குமிடையில் இடம்பெறாததால் பயணிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நேரத்தில், உயர் தொழில்நுட்ப நிறுவனம், ஆசிரிய கலாசாலை ஆகியவற்றின் மாணவர்களும் அரச ஊழியர்களும் பஸ்ஸை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியுள்ளது.

இந்த இடை நேரத்தில் புதிய சேவையொன்றை ஏற்படுத்துமாறு பயணிகள் கேட்டுள்ளனர்.

(ஐ-27)

## கிணற்றில் வயோதிபர் சடலம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

காரைநகர்ப் பகுதியில் கிணற்றில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

அச்சடலம் அன்று மாலை ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

தம்பிப்பிள்ளை நடராசா (வயது 65) என்ற இவரின் சடலம் மரண விசாரணைக்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (இ-5-15-139)

## நன்றி நவில்கின்றோம்

அமரர்

**ஆறுமுகம் கெந்தீஸ்வரன்**

11-03-98 அன்று எமது இல்லத்தில் நடைபெற்ற எமது அன்புத் தெய்வத்தின் 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும் கலந்து கொண்ட அனைவருக்கும், சிறப்பாக எமக்கு பலவிதத்திலும் ஒத்தாசையாக இருந்து உதவிகள் புரிந்த யாழ்ப்பாணம் 'பாஷன் ஹவுஸ்' நிறுவனத்தினருக்கும் எமது அன்பான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

திருமதி சி. கெந்தீஸ்வரன்,
பிள்ளைகள், உறவினர்கள்.

உடுவில். (சி-3112)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**சின்னத்தம்பி மார்க்கண்டு**

(J. P)

எமது கமநல சேவை நிலையத்தில் பல வருடங்களாக குழுத்தலைவராகச் சேவையாற்றிய மதிப்புக்குரிய

**திரு. சி. மார்க்கண்டு**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்து அவரின் ஆத்மாசாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

குழு உறுப்பினர்களும், ஊழியர்களும்,
(54095) கமநல சேவைநிலையம் உடுவில்.

## கௌரவிப்பும் பாராட்டும்

இடம்: யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை
காலம்: 16-03-98 திங்கட்கிழமை பி.ப 2 மணி



சித்த மருத்துவத்துறையில் முதன்முதலாக பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்று, பெருமையைத் தேடித்தந்தமைக்கு

**பேராசிரியர் சு. பவானி** அவர்களை

பாராட்டிப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இத்தருணத்தில் அவரின் தன்னலமற்ற சேவையையும் கடமையுணர்வையும் பாராட்டுவதுடன் அவர் நீடூழி காலம் வாழ்ந்து சித்த மருத்துவத்துறைக்கு அரும்பணியாற்ற இறைவனை வேண்டுகின்றோம்.

கௌரவிப்பு நிகழ்வில் வைத்தியர்கள், சித்தமருத்துவ ஆர்வலர்கள் அனைவரையும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

சித்தமருத்துவ மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை.
கைதடி.

(54096)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரங் குறைந்த 'சேலைன்' குறித்து எச்சரிக்கை!

தனியார் துறையினரால் இறக்குமதி செய்யப்பட்ட தரங் குறைந்த 'சேலைன்' (Saline), 'டெக்ஸ்ரோஸ்' (Dextrose) ஆகிய மருந்துகள் தற்போது தனியார் பாமர்சிகளில் விற்கப்பட்டு வருவதாகவும், இதுபற்றிய கண்காணிப்பு செய்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கொழும்பிலுள்ள சுகாதார சேவை பணிப்பாளர் யாழ். சுகாதார திணைக்கள மாவட்ட உணவு, மருந்து பரிசோதகருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் அறிவித்துள்ளார்.

மேற்படி இரண்டு மருந்துகளும் ஊசிமருந்தாகவும், வாய் மூலம் உட்கொள்ளும் மருந்தாகவும் நோயாளர்களுக்கு பயன் படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-135)

## சிவதொண்டன் நிலையம்

யாழ்ப்பாணம்

23.03.98 திங்கட்கிழமை பி.ப. 2.00 மணி தொடக்கம் திருவடிபூசை அபிடேகமும், 6.4.98 திங்கட்கிழமை குருபூசையும் 434, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சிவதொண்டன் நிலையத்தில் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. சிவதொண்டன் இதழ் சந்தாதாரர் தங்கள் இன்றைய முகவரியைத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ நிலையத்திற்கு அறியத்தருமாறு வேண்டுகின்றோம்.

சிவதொண்டன் சபையார்.

(54078)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளை

### தோல் பொருள் உற்பத்திப் பயிற்சித் திட்டத்துக்கான திட்டப் பணிப்பாளர்

புலோலி தெற்கில் தாபிக்கப்படவுள்ள மேற்படி பயிற்சித் திட்டத்தைப் பொறுப்பேற்று பயிற்சியாளர்களை பயிற்றப்பட்டவர்களால் பயிற்றப்படும் செயற் திட்டத்தினை நடத்துவதற்கான திட்டப் பணிப்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தோல் உற்பத்தியில் போதிய அனுபவம், தோல் பொருள் பெறப்படும் வழிவகை, தோல் பொருள் உற்பத்திக்கான இயந்திரங்களின் அறிவு, முகாமைத்துவம், கணக்கியல். ஆங்கில அறிவு, நிர்வாகத்திறன் ஆகியவற்றுடன் கொழும்பு போன்ற இடங்களுக்குச் சென்று இத்துடன் சம்பந்தப்பட்ட அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யும் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு **20-03-1998** – க்கு முன்னதாக அனுப்பப்படல் வேண்டும். **21-03-1998** (மு.ப. 10) மணிக்கு கிளைத்தலைமையகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது. கல்விச் சான்றிதழ், தோல் பொருள் உற்பத்திக்கான சான்றிதழ்கள், நற்சாட்சிப்பத்திரங்கள், தேசிய அடையாள அட்டை ஆகியவை நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

– கௌரவ செயலாளர்
இ. செ. ச., யாழ். கிளை

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். 14.03.98 (சி/3114)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 04 — 06 — 1916

மறைவு: 15 — 02 — 1998

**திருமதி நல்லம்மா கந்தையா**

கருவறையில் சிறைவைத்து
உருக்கொடுத்த அன்னையே!
நிரந்தரமாய் எம் மனதில்
நிலைத்து விட்ட தெய்வமே!

சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (54032)

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ரவீந்திரன் ஸ்ரெடின் திலீபன் ஆகிய எனது தேசிய (750383980V) விசேட அடையாளஅட்டைகள், பிணைஉறுதிப்பத்திரம் என்பன தட்டாதெருச் சந்திக்கும், சுண்டுக்குளிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் க. கிறிஸ்தோபர், இல. 2/1, 5 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [54085]

சாவகச்சேரி சரசாலை தெற்கைச் சேர்ந்த மாரிமுத்து கதிரவேலு ஆகியவரது விசேட அடையாள அட்டை கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் புளொட் அலுவலகத்திற்கும், பஸ்நிலையத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

[சி/3123]

### வாடகைக்கு

அரச திணைக்களம், கூட்டு வர்த்தக காரியாலயம், தனியார் பாரிய கல்விக்கூடம், மெடிக்கல் கிளினிக் போன்றவற்றிற்கு உகந்த பெரியமாடி வீடு, இரு வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 201/1, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

[54091]

### தெளிவாகப் பார்க்க

ரி.வி நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு புதிய அன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களை திருத்திப் பொருத்துவதற்கும் பூஸ்ரர்களைப் பழுது பார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் (B.Sc.) Caylon Dip in Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம்.

[சி/3068]

### ருஷ்ய மொழி

Russian For Beginners யாழ்ப்பாணத்திலேயே (நகருக்கண்மையில்) கற்பிக்கப்படும். பகுதி நேர / வார இறுதி வகுப்புகள் 29-03-98 இல் ஆரம்பம். குறைந்த கட்டணம், மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி சுயமுகவரிமுத்திரை கொண்ட கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். Chekhov Centre, இல. 714, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

[53979]

### மக்கி தேவைப்படுவோர்!

ஒழுங்கைகள, பள்ளக காணிகளுக்கு 'மக்கி' தேவைப்படுவோர் உடன் தொடர்பு கொள்ளவும். இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு: திருமதி சி. சோமசுந்தரம், இல. 9, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

[54098]

### விண்ணப்பப்படிவம்

அரச சேவையில் சுருக்கெழுத்தாளர் பதவிக்கான படிவம் விற்பனையாகிறது. விவரம் 27-02-98 வர்த்தமானியைப் பார்க்கவும். முடிவுத் திகதி 31 – 03 – 98 நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

(49994)

### விற்பனைக்கு

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு முன்புறமாகவும் சிவன்கோயிலுக்கு அண்மையிலும் பிரதான வீதியில் அமைந்துள்ள மிதுனா அலங்கார வாணிபமும், ராஜா தையல் நிலையமும் அமைந்துள்ள இரண்டு கட்டடத் தொகுதிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. பத்மநாதன் (வைத்தியர்), இரும்பு மதவடி, வதிரி, கரவெட்டி.

[54049]

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனத்தில் தொழில்புரியும் புனர்பூசம், 3 ஆம் பாதம், சைவபோசனம், 17 – 12 – 1959 இல் பிறந்த மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. விண்ணப்பிக்கவும்: இ.ல 716 மே/ பா உதயன் யாழ்ப்பாணம்.

(54097)

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் நடந்ததை அறிய ஆவலாக உள்ள உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் நீங்கள் அனுப்ப வேண்டிய நூல் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். விலை ரூபா 50.

(53740)

---

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்
(வரையுள்ளது)

## வெற்றுச்சாக்கு வெற்றுப்பை விற்பனை

மேற்படி சங்கத்தில் 4000 வெற்றுச்சாக்குகளும், 28,500 வெற்றுப்பைகளும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. மீளப் பெறக்கூடிய வைப்புப் பணம் ரூ. 500 செலுத்தி 24 - 03 – 98 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் பொது முகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்.

பொது முகாமையாளர்.
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

1998 – 03 – 16 (சி–3118)

---

# முயற்சி

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திறன்விருத்தி மையம்

## பயிற்சி நெறிகள் ஆரம்பம்

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| பயிற்சி நெறிகள் | வேண்டப்படும் தகைமைகள் |
|---|---|
| 1. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து (கிழமையில் ஐந்து நாள்கள்) | க. பொ. த. (சாதாரணம்) தமிழ் திறமைச் சித்தி உட்பட ஆறுபாடங்களில் சித்தி. |
| 2. தமிழ், ஆங்கில தட்டச்சு (சனி, ஞாயிறு வகுப்புக்கள், வேலை செய்வோர் உயர்கல்வி கற்போருக்கு முன்னுரிமை) | தமிழ்/ ஆங்கிலம் திறமைச் சித்தி உட்பட ஆறுபாடங்களில் சித்தி |
| 3. தையல் இயந்திரம் திருத்துதல் (சனி, ஞாயிறு வகுப்புக்கள்) பெண்கள் மட்டும் | க. பொ. த. (சாதாரணம்) ஆறு பாடங்களில் சித்தி |
| 4. வயறிங் – றிவைண்டிங் (கிழமையில் ஐந்து நாள்கள்) | க. பொ. த. (சாதாரணம்) ஆறு பாடங்களில் சித்தி |
| 5. நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் – குழாய் பொருத்தல் (கிழமையில் ஐந்து நாள்கள்) | க. பொ. த. (சாதாரணம்) ஆறு பாடங்களில் சித்தி |
| 6. தட்டச்சு இயந்திரம் திருத்துதல் (சனி, ஞாயிறு வகுப்புக்கள்) பெண்களுக்கு முன்னுரிமை | க. பொ. த. (சாதாரணம்) ஆறு பாடங்களில் சித்தி |
| 7. நவீனமுறையில் உடையமைத்தல் | க. பொ. த. (சாதாரணம்) ஆறுபாடங்களில் சித்தி |

★ பயிற்சிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

**விண்ணப்ப முடிவு திகதி: 25 – 03 – 1998**

சுய விவரங்களுடன் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

— நிர்வாகம்

(சி–3105)

---

# தேவை

அலுவலகப் பாவனைக்கும், களஞ்சியப்படுத்துவதற்கும் வசதியான பெரியவீடு தேவைப்படுகின்றது. யாழ். மாகரசபை எல்லைக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்:

**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,**
39, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(சி/ 3108)

---

மனமார

# வாழ்த்துகின்றோம்

சித்த மருத்துவத்துறையின் முதலாவது பேராசிரியராகப் பதவி பெற்ற

பேராசிரியர்

## சுப்பிரமணியம் பவானி

அவர்களை யாழ். பல்கலைக்கழக உமையவன் பரமேஸ்வரன் துணை நின்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
சித்த மருத்துவத்துறை,
கைதடி.

(54084)

---

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 12 — 08 — 1928



உதிர்வு: 19 — 03 — 1995

## திருமதி பூரணம் வீரகத்தி

திதி: பங்குனி அமரபக்க திருதியை: **16 – 03 – 1998**

மூன்றாண்டு முடிந்ததுவே அம்மாவே உம்
முழுமதிமுகம் மறையவில்லை மேதினியில்
மீளாத்துயில் கொண்ட மாயமதை மறக்க
முடியவில்லை
மின்னல் போல் நீர்மறைந்தீர் மீளிரவோ வழியில்லை
மாண்பான குலவிளக்காய் மாண்போடு
வாழ்வதற்காய்
மனதில் திறன் கொண்டு மதித்து வளர்த்தாயே
அகிலம் அறிய முன்னம் அகன்றனைய நம்மை விட்டு
ஆவதறியாமல் ஆறுதலில்லாமல் ஆறிடுமோ எம் ஆவி


ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அன்புக் கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கச்சார் வெளி,
பளை.

(சி/3122)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



சிவபூமியில்:
**27 – 08 – 1938**

சிவலோகத்தில்:
**14 – 02 – 1998**

## திருமதி இந்திராணி நித்தியானந்தன்

தாயே! நீ இறக்கவில்லை;
தாய்மைக்கு என்றும் இறப்பில்லை!

எமது அன்னையின் ஆத்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

( 54073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வார்த்தை வெல்லாது

கிழக்கு மாகாணத்தில் வாகனப் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டது குறித்தும், இரண்டு வாரங்களுக்கு அதனைத் தளர்த்த இணங்கியது குறித்தும் இப்பத்தியில் நேற்று எழுதியிருந்தோம்.

'பாதுகாப்புக் காரணங்களுக்காக' என்ற முத்திரையுடன் தமிழர்கள் மீது அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்படுவதை கிழக்கிலங்கை வாகனத் தடை மேலும் ஊர்ஜிதப்படுத்துவதாகக் கூறியிருந்தோம்.

அதனை மேலும் அத்தாட்சிப் படுத்தும் விதத்தில் வவுனியாப் பகுதிப் பாதுகாப்புப் படை அதிகாரிகளின் தீர்மானம் ஒன்று அமைந்துள்ளது.

மன்னாரில் இருந்து கொழும்பு மற்றும் தென் பகுதிகளுக்குச் செல்லும் மக்கள் வவுனியா வழியாகச் செல்ல முடியாது; அதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மதவாச்சிஊடாக மட்டுமே செல்ல முடியும். இந்தத் தடை உத்தரவு பஸ் மற்றும் வாகனங்களுக்கு மட்டுமன்றி ரயில் பிரயாணிகளுக்கும் பொருந்தும்.

பாதுகாப்புப் படையினரின் பிரதானமான பணி மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகும். ஆனால் தமிழ்ப்பகுதிகளில் அவர்கள் நடைமுறைப்படுத்தும் விதிகள் அல்லது உத்தரவுகள் தமிழ்மக்களின் பாதுகாப்புக்கு 'வேட்டு' வைப்பனவாகவே பெரும்பாலும் அமைந்து விடுகின்றன.

பாதுகாப்பு அதிகாரிகளின் இத்தகைய முடிவுகள் பலவும் படையினரின் பாதுகாப்புக் கருதியனவாகவோ அல்லது தமது பணிப் பளுவைக் குறைக்கும் நோக்கமுடையனவாகவோ உள்ளன.

தமிழ் மக்களை பொறுத்தவரையில், பாதுகாப்புப் படைகள் தமக்குப் பாதுகாப்பளிக்க மாட்டா, பாதுகாப்புக்குக் குந்தகமானவையே என்ற மனப்பதிவே உண்டு. அந்த மனப்பதிவை மேலும் ஆழமாக்கும் வகையிலேயே படையினரின் நடவடிக்கை ஒவ்வொன்றும் அமைகின்றது.

படையினர் கைப்பற்றியுள்ள பகுதிகளில் அவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் நல்லுறவும் நல்லெண்ணமும் நிலவினாலேயே அரசினால் தமிழர்களின் இதயங்களை வெல்வதற்கான வாசல் திறக்கப்படும்.

ஆனால் பாதுகாப்புப் படையினரின் ஒவ்வொரு செயற்பாடும், நடவடிக்கையும் முன்னேற்றத்துக்குப் பதிலாக எதிர்த் திசையில் பின்னிழுத்துச் செல்வதாகவே அமைகின்றன.

பிரயாணக் கட்டுப்பாடுகள், தடைகள் போன்றவை தமிழர்களுக்குக் கொடுக்கப்படும் தொல்லைகளும் தொந்தரவுகளும் இன்னல்கள் மட்டுமல்ல அவர்களின் உரிமைகளைப் பறிப்பதுமாகும்.

இதனை உணராமல் பாதுகாப்புப் பிரிவினரின் எல்லா நடவடிக்கைகளுக்கும் கோயில்மாடு போன்று தலையாட்டிக் கொண்டு தமிழர்களின் மனங்களை வெல்லப் போகின்றோம்; வெல்வோம்; என்று அரசு கூறுவது வெறும் வார்த்தை ஜாலமும் நடிப்புமே அன்றி வேறென்ன? செயலில் இல்லாத வார்த்தை வெல்லாது.

# கீரிமலையின் பழைய புனிதச் சூழலை உருவாக்கித் துய்க்க வாய்ப்பு வருமா?

(இம்மாதம் நான்காம்திகதிய உதயனில் ''நவராத்திரியன்று கீரிமலைப்பயணம்'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின்இரண்டாவதுபகுதிஇது).

1990–செப்ரம்பர் 18 ஆம் திகதி.

அன்றுதான் அந்தப் பயங்கரம் நிகழ்ந்தது.

கௌரிவிரதம் அனுஷ்டித்து காப்புப்பெறுவதற்காக ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் கூடியிருந்தனர்.

விமானங்கள் அப்பகுதியில் வட்டமிடவே அங்கு கூடியிருந்த பக்தர்கள் அபயக்குரல் எழுப்பி ஆலய மூலஸ்தான மண்டபத்திற்குள் தஞ்சம் பெற்றனர்.

குழந்தை, குட்டிகளை இழுத்துக்கொண்டு பக்தர்கள் பாதுகாப்புத்தேடி ஓடினர்.

அச்சமயம் ஆலய வசந்த மண்டபப்பகுதியில் குண்டு வீசப்பட்டது.

ஒருவர் ஒரு கையை இழந்நார். மற்றும் பலர் காயங்களுக்கு உள்ளானார்கள்,

அங்கு பதற்றத்துடன் பதறியடித்துக் கொண்டு பக்தர்கள் எழுப்பிய அபயக்குரலுக்கு மத்தியில் இரண்டாவது குண்டு ஆலய முன்றலில் இருந்த தேர் முட்டியில் வீழ்ந்து வெடித்தது,

விமானங்கள் சென்றபின்னர் களேபரம் அடங்கவே, கீரிமலைப்பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர்.

அன்று இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களைப் பார்க்க சிவராத்திரி அன்றுதான் வாய்ப்புக்கிடைத்தது.

எட்டு வருட இடம்பெயர்வின் பின்னர் மீண்டும் தமது பகுதிகளைப் பார்வையிடக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அன்று மக்கள் அங்கு பெருமளவில் கூடினர்.

கீரிமலையின் முழுப்பகுதிக்கும் மக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. போவதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளின் சேதங்களைப் பார்த்து தமது இருப்பிடங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை அவர்கள் அனுமானித்துக் கொண்டனர்.

ஆலயப் பகுதியிலும், தாம் வாகனம் மூலம் அழைத்துச் செல்லப்பட்ட பாதைப்பகுதியிலும், ஆலயச் சுற்றாடல் பகுதிகளிலும் காணப்பட்ட சேதங்களைப் பற்றி கருத்துப்பரிமாறிக் கொள்வதிலேயே அவர்கள் இரவில் பெரும் பகுதியைக் கழித்தனர்.

நாம் இடம்பெயர்ந்து எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. எமது இருப்பிடங்களுக்கு திரும்பும் காலம் எப்போது கனியப் போகிறது என்பதே அவர்களின் ஆதங்கமாக இருந்தது.

## ஆலயங்களுக்குச் சேதம்விளைவித்து கடவுளரையும் பிரித்துவிட்ட மனிதர்!

எட்டு வருடம் என்பது ஒரு சிறிய காலமா? இவ்வளவு காலமாகியும், எமது இருப்பிடத்துக்கு திரும்ப அனுமதி கிடைக்கவில்லை என்றால் இன்னும் நாம் நரக வாழ்க்கையைத் தொடர்வதாஎன்ற கேள்வி அவர்களிடையே எழுந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

### கீரிமலைக் கேணியில்

ஏதோ கிடைத்த சந்தர்ப்பத்தை வீணாக்காமல் பெரும்பாலான இளவட்டங்கள் கீரிமலைக் கேணியிலும், கடலிலும் மணிக்கணக்கில் கிடந்து நீராடியதைக்காண முடிந்தது.

ஆலய முகப்புக் கோபுர வளைவு என்றும் போல் பக்தர்களை அழைக்கும் கம்பீரத்துடன் காட்சி தந்த போதிலும், வாசலை அடைந்து ஆலயத்தை நோக்கியபோதுதான் அதன் பொலிவிழந்த, சேதமடைந்த காட்சியைக் காணமுடிந்தது.

ஆலயத்தின் கோபுர வாசல் பராமரிப்பு இன்றி பழைய கட்டடம் போன்று தோற்றமாக காட்சியளித்தது.

கோபுர வாசலைத் தாண்டி ஆலய முன் மண்டபத்தை அடைந்த போது அங்கு ஓடுகள் யாவும் சேதமடைந்திருக்கக் காணப்பட்டன.

அந்த மண்டபத்தைத் தாண்டி ஆலய உட்புறம் சென்றபோது, முன்னர் வண்ண வடிவம் காட்டிய உள்மண்டபச் சுவர்கள் மழையிலும், வெயிலிலும் நனைந்து பாசி பிடித்த நிலையில் காட்சி தந்தன.

உள்மண்டபத்தின் கூரைகள் ஓடுகள் சிதைந்த நிலையில் எப்போது மக்கள் தலையில் விழுமோ என்ற அச்சம் நிலவியது.

ஆலய வசந்த மண்டபத்தின் முன்பாக வீழ்ந்து வெடித்த குண்டின் சிதறல்கள் ஆலயத்தின் சுவர்களைப் பதம்பார்த்த காட்சியும் அழிவுக் கோலமாகத் தெரிந்தது.

### தெய்வங்களை பிரித்த மனிதர்கள்

ஆலயத்தின் உள் வீதியில் பின்னால் அமைந்திருந்த பல சிலைகளை காணவில்லை. எழுந்தருளியில் வீற்றிருந்த முருகன்–வள்ளி–தெய்வானை மூர்த்தத்தில் வள்ளியின் சிலையைக் காணவில்லை.

பஞ்சலிங்கங்களில் ஒரு லிங்கத்தைக் காணவில்லை. சிவனும், உமாதேவியாரும் வீற்றிருக்க அவர்களின் மடியில் முருகன் வீற்றிருக்கும் மூர்த்தம் சோமஸ்கந்தர் மூர்த்தமாகும். ஆனால் இப்போது முருகனைக் காண முடியவில்லை!

தெய்வங்களையே பிரித்து விட்டார்கள் மனிதர்கள்!

சிற்ப வேலைகள் துவங்கிட அமைந்து அருள்பாலித்துக்கொண்டிருந்த கருங்கல்லினால் வடிக்கப்பட்ட ஆறுமுக சுவாமியையும் காணவில்லை. ஆலய வட–மேற்கு மூலையில் இந்தச் சிலை அமைந்திருந்தது.

பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருந்த பல சிலைகளைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

நவக்கிரகங்கள் அமைந்திருந்த ஆலயத்தில் ஒரு நவக்கிரக விக்கிரகம் மட்டுமே காணப்பட்டது. ஏனையவற்றைக் காணவில்லை.

ஆலயத்தின் சிவன் வாசல், அம்மன் வாசல் ஆகியவற்றில் அமைந்திருந்த கொடித்தம்பங்கள் சேதமடைந்து சாய்ந்த நிலையில் காட்சிதந்தன.

ஆலய வாசலில் நின்ற சிவனின் தேரின் சில்லு மட்டும் அங்கு சிதறிக்கிடக்கக் காணப்பட்டது. ஏனைய எந்த ஒரு பாகத்தையும் காணவில்லை.

அம்மன் வாசலில் நிறுத்தப்பட்டிருந்த அம்மன் தேர் மட்டும் விதிவிலக்காக நல்ல நிலையில் காட்சி தந்தது.

வெளிவீதியில் அமைந்திருந்த ஆலயக் குருமாரின் வீடுகள் இருந்த இடமே தெரியவில்லை, எங்கும் வெட்ட வெளியாகத் தெரிகிறது.

இவற்றைப் பார்த்ததும் ஆலயம் எப்போது புனரமைக்கப்பட்டு பழைய நிலையில் தோற்றம் தரப் போகிறதோ என்ற கேள்வியே பக்தர்கள் மனதில் எழுந்தது.

ஆலயச் சுற்றாடலில் அமைந்திருந்த மடங்கள் உடைந்தும், சிதைந்தும் பாழடைந்த நிலையில் காட்சி தந்தன. பெரும்பாலண மடங்களின் கூரைகள், கதவுகள் இன்றித் தனியாக சுவர்கள் மட்டுமே மிஞ்சி நிற்கின்றன.

வரலாற்றுப் பெருமை மிக்க புனித கேணிப்பக்கம் சென்றோம். பெரிதாக சேதம் எதுவும் இல்லையாயினும், வேலைப்பாடுகளுடன் அமைந்த இளைப்பாற்று மண்டபத்தில் சில தூண்கள் உடைந்து காணப்பட்டன.

### கேணியடியில் தென்பு

கேணியில் கலங்கிய நீரே காணப்பட்டது. நோய்களைக் குணமாக்கும் புனித தீர்த்தமாக விளங்கிய அந்தக் கேணியின் நீர் கலங்கிய நிலையில் இருந்ததால், பொதுமக்கள் கடலிலேயே குளித்தார்கள்.

ஆண், பெண், குழந்தைகள், வயோதிபர்கள் என்ற வேறுபாடு இன்றி கடலில் குளித்த காட்சியை எட்டு வருடங்களின் பின் பார்க்கப் நேர்ந்தமை ஒருவகைத் தென்பைத் தந்தது.

''கடலில் பல மணிநேரம் கிடந்து இனி எப்போது வந்து ஆறுதலாக ஆனந்தமாகக் குளிப்போம்'' என்று பக்தர்கள் தமக்கிடையே பேசிக் கொண்டனர்,

கேணியடிப் பிள்ளையார் கோயில் பலத்த சேதத்துடன் காட்சி தந்தது. அக்கிருந்த விக்கிரகங்களும் சேதமடைந்த நிலையில் காணப்பட்டன.

அருகே அமைந்துள்ள மாரியம்மன் கோயிலும் சேதமடைந்து காணப்பட்டது. அங்கிருந்த தேரும் சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

கேணிக்குச் சமீபமாக அமைந்திருந்த ஈழத்துச் சித்தர்கள் பலரின் சமாதிக கோயில்களும் சேதமடைந்து காணப்பட்டன.

பிதிர்கடன் கிரிகைகள் செய்யும் மடங்களும் சேதமாகிக் காட்சிதந்தன.

அன்றிரவு சிவராத்திரியை ஒட்டி விசேட ஓமம் நகுலேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்றது. பெரிய குண்டம் அமைத்து பல சிவாச்சாரியார்கள் அமர்ந்து இருந்து சிறப்புற ஓமத்தை நடத்தினர்.

அதன் பின்னர் விசேட அபிஷேக பூசைகள் இடம் பெற்றன. விசேட நாதஸ்வரக் கச்சேரிகள், சமயச் சொற் பொழிவுகள், பண்ணிசைக் கச்சேரிகள் சிறப்புற சிவராத்திரியில் நடந்தேறின.

பக்தர்கள் நீண்ட இடைவெளியின் பின்னர் கீரிமலையில் சிவராத்திரி விரதத்தை கொண்டாடினோம் என்ற நிறைவுடன் திரும்பினர்.

சென்.ஜோன்ஸ்அம்புல்ன்ஸ் படையைச் சேர்ந்த தொண்டர்கள் பக்தர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கினர்.

படையினர் கடை அமைத்து மக்களுக்கு தேநீர் மற்றும் உணவு வகைகளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

**மாவை குகன்**

## தவக்கால சிந்தனை

(20ஆம் நாள்)

புதிய வானம், புதிய பூமி, மகிழ்ச்சிவாழ்வு. மறுவுலக மகிழ்ச்சிக்காக மட்டுமன்று, இவ்வுலகிலும் நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்றே இறைவன் எம்மைப் படைத்தார். (ஆதி. 1 : 26 – 31)

பாவத்தினால் நாம் அவரை விட்டு, விலகிச் சென்ற நிலையிலும் தம் பாடுகள், உயர்ப்பின் வழி நமக்கு மீட்பளித்து இம் மகிழ்ச்சியைத் திரும்பத் தந்தார். நீதி, நியாயம் எங்கே தழைக்கிறதோ அங்கே இறைவன் இருக்கிறார். இவ்வுலகில் எங்கெல்லாம் அநீதி அழிக்கப்பட்டு, நீதிஆட்சி செலுத்துகின்றதோ, எங்கெல்லாம் நீதி, நியாயத்திற்காகப் போராட்டம் நடக்கிறதோ, எங்கெல்லாம் சமத்துவம், அமைதி, சமாதானம் நிலைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம் புதிய வானமும், புதிய வையமும் பிறந்து விட்டன எனலாம்.

நம் வீட்டிலே, பணித்தளங்களிலே, சமுதாயத்திலே நீதியின் சின்னங்களாகத் துலங்கின்றோமா?

''நீதியினிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களதே.'' (மத். 5: 6– 101).

–சூ. மரியநாயகம்

## உதயவாக்கு

தற்காலிகமான சிறியதொருபாதுகாப்பைவிலைக்கு வாங்குவதற்காகத் தங்களது அத்தியாவசியமான சுதந்திரத்தை விட்டு விடுபவர்கள் சுதந்திரத்திற்கும் தகுதியானவர்களல்லர்; பாதுகாப்பிற்கும் தகுதியானவர்களல்லர்.

– பெஞ்சமின் பிராங்ளின்

## நாளை

பங்குனி 03

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தி

மாலை: 6.06 வரை

நட்சத்திரம்: சுவாதி

பிற்பகல்: 4.13வரை

சுபநேரம்: 10.50-12.20

ராகு காலம்: 3.20-4.50

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில இடங்களில்

## தரிக்காமல் செல்லும் பாடசாலை பஸ்கள்

### மாணவர்கள் பாதிப்பு

பருத்தித்துறை வீதியூடாக பாடசாலை மாணவருக்கான சேவையில் ஈடுபட்டு வரும் போக்குவரத்துச்சபை பஸ்கள் காலை வேளையில் சில இடங்களில் தரிக்காமல் செல்வதால் மாணவர்கள் பாதிக்கப்படுவதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நல்லூர், கல்வியங்காடு பகுதிகளில் இந்த பஸ்கள் தரிப்பிடங்களில் தரித்து மாணவரை ஏற்றிச் செல்லப் பின்னடிப்பதால் பாடசாலை செல்லக் காத்து நிற்கும் மாணவர்கள் அடிக்கடி ஏமாற்றத்துடன் திரும்புவதாக பாதிக்கப்பட்ட மாணவரின் பெற்றோர் ஒருவர் கவலை தெரிவித்தார். (ஐ-5)


**MEMORICH**

(BRAIN TONIC)

A MEMORY BOOSTER & HEALTH PROMOTER

மெமோரிச் ஓர் ஆயுர்வேத முறைப்படி தயார் செய்யப்பட்ட மன, உடல் வளர்ச்சிக்கான மூளையின் செயற்பாட்டை விருத்தி செய்து தூண்டக் கூடிய அற்புதமான இனிப்பான சுவையான பானமாகும்.

★ மூளைச் சோர்வு ★ மனச் சோர்வு
★ ஞாபகசக்திக் குறைவு ★ நரம்புத் தளர்ச்சி
★ பலஹீனமனநிலை ★ பதற்றம்

போன்ற நிலைகளிலும், பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கும் நாட்பட்ட நோயாளர்களுக்கும் புத்துணர்வையூட்டவல்லது.

இது ஓர் இந்தியத் தயாரிப்பாகும்.

விலை ரூபா 250.

மங்களபதி வைத்தியசாலை
41/5, அரச வீதி,
(பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில் வீதி)
நல்லூர், யாழ்ப்பாணம்.

(54100)


## வாழ்த்துகின்றோம்

யாழ். ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக் கிளையில் பிரதி முகாமையாளராக நீண்டகாலம் கடமையாற்றி இன்று (16-03-1998) ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றிருக்கும்

**திரு. ச. பாலசுந்தரம்**
பி. ஏ. (சிறப்பு)

அவர்களுக்கு எமது உளங் கனிந்த வாழ்த்துக்கள்!

(54042) — நண்பர்கள்

# மாகாண முதல் எழுத்துகளுடன் வாகனங்களுக்கு புதிய இலக்கத் தகடு

### அமைச்சர் பௌஸி திட்டம்

கொழும்பு, மார்ச் 16

மாகாணப் பெயர்களின் முதல் எழுத்துக்களைக் கொண்ட கணனிமயப்படுத்தப்பட்ட வாகன இலக்கத் தகடுகளை புதிதாக அறிமுகப்படுத்த போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி திட்டமிட்டுள்ளார்.

இலக்கத் தகடுகளைப் பார்த்த உடனேயே வாகனம் எந்த மாகாணத்தைச் சேர்ந்தது என்பதை எளிதில் கண்டு கொள்ள ஏதுவாகவே இந்த புதிய முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் இந்த புதிய முறைக்கான ஆலோசனையை அமைச்சரவையில் சமர்ப்பிக்க தாம் ஆயத்தமாக இருப்பதாகவும் அமைச்சர் பௌஸி தெரிவித்தார்.

தலைநகருக்குள் வரும் வாகனங்களை இந்த நடைமுறையின் கீழ் இனங்கண்டு கொள்ள முடியும். குண்டு வெடிப்புகளுக்காக பயன்படுத்தப்பட்ட வாகனங்களையும் அடையாளம் கண்டு கொள்ளவும் இப்புதிய முறை ஏதுவாக இருக்கும் என்றும் —

மாகாணங்களை முதல் எழுத்துகளாக கொண்ட இலக்கத் தகடு அமைக்கும் முறை தற்போது இந்தியாவில் நடைமுறையில் உள்ளது. இதுபோன்றே எமது நாட்டிலும் அறிமுகப்படுத்தப்படும். ஆனால் இவை கணனி முறையில் அமைக்கப்படுவதுடன் எல்லா தனியாருக்கும் இலக்கத் தகடுகளைத் தயாரிக்கும் உரிமை ரத்துச் செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

முதலீட்டுச் சபையின் உதவியுடன் இரண்டு அல்லது மூன்று பேருக்கே இலக்கத் தகடுகள் தாயரிக்கும் உரிமை வழங்கப்படும்.

சகல வாகனங்களின் முன், பின் இருபக்கங்களிலும் இலக்கத் தகடுகள் பொருத்தப்படுவதுடன், வாகனத்தின் முன் கண்ணாடியிலும், ஸ்ரிக்கர் வடிவில் ஒட்டப்படும் இவை விசேடமாக வடிவமைக்கப்பட்டு கணனிப் பிரதிகள் மூலம் பெறப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

## பாடசாலை மாணவருக்கு எட்டு பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

பாடசாலை மாணவர்களுக்கான எட்டு பஸ்சேவைகள் பாடசாலை நாள்களில் வட பிராந்திய போக்குவரத்துச் சபையினரால் நடத்தப்பட்டுவருகின்றன.

யாழ். நகரில் இருந்து அச்சு வேலி வரை 3 சேவைகள் இடம் பெறுகின்றன. அதேபோல் யாழ். நகரில் இருந்து கைதடிக்கு ஒருசேவையும், மிருசுவிலுக்கு ஒருசேவையும், புன்னாலைக்கட்டுவன் மல்லாகம் வரை 2 சேவைகளும், தெல்லிப்பழை வரை ஒரு சேவையும் இடம்பெறுவதாக போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பருவகாலச் சீட்டு பெற்று பஸ் சேவைகள் மூலம் பாடசாலை செல்லும் மாணவர் எண்ணிக்கை தற்போது அதிகரித்துவருகிறது. (ஐ-5)

## மேலும் ஒரு தொகை மோப்ப நாய்கள்

### கொள்வனவு செய்ய முடிவு

கொழும்பு, மார்ச் 16

வெடிமருந்துகளை இனங்காணும் பொருட்டும், பாதுகாப்பு நடவடிக்கையில் பயன்படுத்தவுமென ஒரு தொகை மோப்ப நாய்களை இலங்கை பொலீஸ் திணைக்களம் கொள்வனவு செய்யவுள்ளது.

தற்போது 125 மோப்ப நாய்கள் வெடிமருந்துகளை இனம் காணுவதற்கும் போதைப் பொருள்களைக் கண்டுபிடிப்பதற்கும், குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கைளுக்குமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது நாடு பூராவும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள இவ்வேளையில் மோப்ப நாய்களின்தொகையை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதைத் தொடர்ந்தே வெளிநாடுகளில் இருந்து மோப்ப நாய்களைக் கொள்வனவு செய்ய பொலீஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ள இம் மோப்ப நாய்களைக் கொண்டு உள்ளூர் நாய்களுக்கும் போதிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இதற்காக நல்ல இன நாய்களை விலை கொடுத்து வாங்குவதற்கும் பொலீஸ்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## அலுவலகம் இடம்மாற்றம்

சுன்னாகம், மார்ச் 16

சுன்னாகம் தெற்கு கிராம சேவையாளர் அலுவலகம் இடமாற்றப் பட்டுள்ளதாக கிராம சேவகர் செ. வைத்தியநாதன் அறிவித்துள்ளார்.

தற்போது தேவசபை அலுவலகத்துக்கு முன்பாக கே.கே.எஸ்.வீதியில் இவ்வலுவலகம் இயங்குவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-27)

## ஆலய சூழலில் சிரமதானம்

பங்குனித் திங்கள் உற்சவத்தை முன்னிட்டு சரித்திரப் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய சூழலும் அப்பகுதி வீதிகளும் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. இச் சிரமதானம் மட்டுவில் இந்து இளைஞர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மாணவர்கள் சிரமதானப்பணியை மேற்கொண்டனர். (ஐ-31)

### கீரிமலையின்...


(ஏழாம் பக்கத் தொடர்)

வழங்கினர். அதிகாலை தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கப்பட்டது.

பழைய கீரிமலையையும், அதன் ஆலயப் பொலிவையும், ஆரோக்கியத்துக்கு உகந்த சூழலையும் மீண்டும் உருவாக்க வசதியும் வாய்ப்பும் கிடைக்குமா என்பதே பலரின் மனதை உறுத்தும் கேள்வியாக நிற்கிறது இப்போது!

★ (முற்றும்)

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 21 — 01 — 1940
உதிர்வு: 27 — 03 — 1997

அமரர்

**சின்னத்தம்பி குணரத்தினம்**

(முன்னாள் பிரபல வர்த்தகரும், குயின்சி பஸ் உரிமையாளரும்)

திதி: 1998 — 03 — 16

எம் இனிய தெய்வம் – அப்பா!
நீங்கள் எங்களை பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ?
காலமெல்லாம் எமக்குத் துணையாவீர்கள் என்றே
கனவு கண்டோம் – அப்பா!
கனவெல்லாம் கானல் நீராய்ப் போனதன் மர்மமென்ன?
ஏற்றமுடன் பலர்வாழ்வு நிலைத்திடவே பொழுதெல்லாம்
உழைத்தீர்களே – அப்பா!
இன்று சித்திரமாய் பார்க்கும்படி விட்டு விட்டு விண்ணிலே
கலந்ததுவும் கண்ணிலே அருவியாய் நீர்பாய
வாழ்கின்றோம் - அப்பா!
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் தான் சென்றாலும்
ஆறாது எம் துயரமப்பா!



மலர்வு: 04 — 03 — 1922
உதிர்வு: 26 — 03 — 1997

திருமதி

**நடராசா சிவபாக்கியம்**

திதி: 1998 — 03 — 15

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின்
இருப்பிடமாய் விளங்கிய – எங்கள் அம்மாவே!
எமக்கெல்லாம் இனிய வாழ்வு தந்து இன்பமூட்டிய
எம் தெய்வமே!
நீங்கள் செய்த புண்ணியமே உங்களை படுக்கையில்
வைக்காமல் மருமகனிற்கு முதல் நாளில் விண்ணுலகிற்கு
கடுகதியாய்ச் சென்றீர்களோ – அம்மா!
நீங்கள் பெற்றெடுத்த மக்களும் மாமியென எண்ணாது
மாண்புமிகு தாயென மதித்த மருமக்களும்
தாலாட்டி வளர்த்த பேரமக்களும் பதைபதைத்து நிற்க
விரைந்து சென்றதெங்கே?
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சிலே நிற்குதம்மா!

நிலையான வாழ்வு தேடிச்சென்ற எம் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

''குயின்சி பஸ்'',
சிவகுல வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

(54068)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் பிறக்கும் குழந்தைகளில் பலர் போசாக்கின்மையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

''வன்னியில் பிறக்கும் பிள்ளைகளில் 60 சதவீதத்துக்கு மேற்பட்டவை போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டே பிறக்கின்றன''

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஐ.நா.செயலருக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மத்தியில் பெருமளவில் பரவும் மலேரியா, செப்ரிசீமியா போன்ற நோய்கள் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

இடம்பெயர்ந்து தொழில் இன்றி வறுமையில் வாழ்வதால் வன்னியில் பிறக்கும் பிள்ளைகளில் 60 சதவீத மானவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டே பிறக்கின்றன. — இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் இந்த மகஜர் அனுப்பப்பட்டுள்ளது. (இ-3)

## மன்னார் வரும் பயணிகளுக்கு இன்று முதல் மூன்று நாள் ''பாஸ்''

உயிலங்குளத்தில் இருந்து மன்னார் வரும் மக்களுக்கு இனிமேல் மூன்று நாள் ''பாஸ்'' வழங்குவதென முடிவெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரிகேடியர் ஜயசுந்தர தெரிவித்தார்.

இந்தப் புதிய நடைமுறை இன்று திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் என்று மன்னார் மாவட்ட சிவில் நிர்வாகத்திற்குப் பொறுப்பாளரான மேஜர் எச். [illegible] ஜயலத் தெரிவித்தார்.

இது வரை உயிலங்குளத்தில் இருந்து மன்னாருக்குப் பல்வேறு தேவைகளின் பொருட்டு வருபவர்களுக்கு ஒரு நாள் ''பாஸ்'' மட்டுமே வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் இராணுவ முகாமில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்தே மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## எலிக் காய்ச்சல் கட்டுப்பாட்டில்!

கொழும்பு, மார்ச் 16

பாதுக்க, மஹரகம, ஹோமகம, பசறை, பிலியந்தலைப் பகுதிகளில் கடந்த மாத முற்பகுதியில் எலிகளின் சிறுநீரில் உள்ள ''பஸ்ஒஸ்ரின்'' என்னும் வைரசினால் பரவிய காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 108 பேரில் 3 பேர் உயிரிழந்திருந்தனர்.

தண்ணீரில் எலியின் சிறுநீர் கலப்பதனாலேயே இக்காய்ச்சல் பரவியதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

**யாழ்.மாவட்டத்தில் கட்டடங்கள் அமைத்தல், கட்டடப்பொருள்கள் வழங்கல் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்**

**மாவட்ட புனர்வாழ்வு இணைப்புக்குழு யாழ். செயலகம்**

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பிரிவில் செயற்படுத்தவிருக்கும் மீளக்குடியமர்வு, புனரமைப்பு வேலைகளுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள் வழங்குதல், கட்டடங்கள் அமைத்தல் முதலான வேலைகளைச் செய்வதற்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்ய யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்கும் புனரமைப்பு ஒருங்கிணைப்பு குழு உத்தேசித்துள்ளது. இவ்வேலைகளைச் செய்ய விரும்புவோர் மேற்படி செயலகத்திலுள்ள பொறியியலாளர் புனரமைப்புப் பகுதியில் தேவையான படிவங்களை அலுவலக நாள்களில் காலை 9. 30 மணி தொடக்கம் மாலை 4. 00 மணி வரை **16 - 03 - 98** தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

க. சண்முகநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

13-03-98 (சி/3126)

---

## ஆசிரியர் தேவை

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட இருக்கும் மனையியல் அடிப்படைப் பயிற்சி நெறிக்கு தையல், பூவேலை, ஐசிங், சிற்றுண்டி தயாரித்தல் ஆகியன போதிப்பதற்கு ஆசிரியர் தேவை. தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் **22 — 03 — 1998** ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு இல. 14, மணிக்கூண்டு வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கவும்.

— மாவட்டச் செயலாளர்

(சி/3127)

---

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய், மார்ச் 16

பங்குனித் திங்கள் திருநாளை முன்னிட்டு உரும்பிராய் வடக்கு திருவீதி பேய்ச்சியம்மன் ஆலயத்தில் திங்கள் தோறும் காலையில் பொங்கல் நடைபெறும். நண்பகல் 12. 00 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து பூசையும் இடம்பெறும் அடியார்களின் வசதியை முன்னிட்டு காலை 8. 00 மணி முதல் ஆலயம் திறந்திருக்கும். (ஐ-154)

★ ★ ★

கொழும்புத்துறை வளன்புரம் புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா இன்று திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை காலை யாழ். மாவட்ட குருமுதல்வர் அருட்திரு. ஜே. பி. சி. செல்வராசா அடிகளாரினால் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அன்று சிறுவர்களுக்கான முதல் நன்மை வழிபாடும், திருச்சொரூப பவனியும், ஆசிரும் பங்குத் தந்தை அருட்திரு. சாள்ஸ் கொலின் அடிகள் தலைமையில் நடைபெறும். (ஐ-135)

## சீனிக்கு தொடர்ந்து தட்டுப்பாடு

உரும்பிராய், மார்ச்16

சீனிக்குத் தொடர்ந்து தட்டுப்பாடு நிலவுவதால் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பங்கீட்டு அடிப்படையில் இரு அங்கத்தவர்களுக்கு அரைக் கிலோவும், அதற்கு மேல் ஒரு கிலோவும் வழங்கப்பட்டது.

இதுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்யாததனால் கூடிய விலை கொடுத்து வெளிச்சந்தையில் சீனியை வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சீனிக்காக பலரும் கடை கடையாகச் சென்று அலைவதைக் காணக்கூடியதாக உள்ளது (ஐ-154)

## ஒன்றுகூடல்

கொழும்புத்துறை, மார்ச்16

ஆசிரிய நியமனத்துக்குரிய தகைமைகளைப் பெற்றிருந்தபோதும் வதிவிட வேறுபாடுகளாலும் பிற காரணங்களினாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒன்றுகூடல் நல்லை ஆதீனத்தில் இன்று திங்கள் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை அறிவித்துள்ளது. (ஐ-30)

## விறகு, சீற கொண்டு செல்லத் தடை

இளவாலை, மார்ச் 16

இளவாலைப் பகுதியில் இருந்து விறகு, கூரைத் தகடு, மரம் என்பனவற்றை வெளியே கொண்டுசெல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்கும், பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் இத்தடை அமுலாக்கப்படுவதாகத் தெரியவருகிறது. (ஐ-ரீ)

## வன்னிப் பகுதியில் மலேரியா தீவிரம்

வடக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும், இராணுவத்தினரால் மீட்கப்பட்ட பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையானோர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெங்கலச்செட்டிகுளம் கிராம வைத்தியசாலையில் மாதாந்தம் ஆயிரம் பேர் மலேரியாவுக்கு சிகிச்சை பெற வருகை தருகின்றனர் என்று அங்கு கடமையாற்றும் டாக்டர் எஸ். கே. நடராஜா தெரிவித்தார்.

பத்திரிகையாளர் குழுவொன்று கடந்த வாரம் செட்டிகுளம், வவுனியா, முருங்கன், உயிலங்குளம், மன்னார் ஆகிய பகுதிகளிலுள்ள எல்லைப் புறக் கிராமங்களுக்கு விஜயம் செய்தது. அச்சமயம் இந்த விவரம் தெரியவந்துள்ளது. (ஐ - 10)

## மருத்துவ மாணவர்கள் இரத்ததானம்

யாழ். மருத்துவபீட மாணவர்கள் கடந்த வெள்ளியன்று யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தனர்.

காலஞ்சென்ற மருத்துவபீட மாணவன் சத்தியேந்திராவின் நினைவாக குடாநாட்டு மக்களின் நலன்கருதி 36 மருத்துவ மாணவர்கள் இரத்தம் வழங்கினர்.

இரத்த வங்கியில் நிலவும் பற்றாக்குறையை நீக்க இம்மாணவர்களது இரத்ததானம் உதவியுள்ளதாக இரத்த வங்கி அதிகாரி டாக்டர் திருமதி திருமகள் சிவசங்கர் தெரிவித்தார்.

இரத்ததானம் வழங்க முன்வருமாறு அவர் மாணவர்களையும், நலன்விரும்பிகளையும் கேட்டுக் கொண்டார்.

இரத்தம் பெறுவதில் தரகுப் பணம் பெறுதல், வியாபார நோக்கோடு செயற்படுதல் போன்ற நடவடிக்கைகளை இதன் மூலம் தடுக்க முடியும் என்றும் டாக்டர் திருமகள் தெரிவித்தார்.

## காட்டுத் தீ!

கந்தானைமலைப்பகுதியில் உள்ள போலவத்தை காட்டுப்பகுதியில் வியாழக்கிழமை நண்பகல் 11 மணியளவில் திடீரெனப் பரவிய காட்டுத்தீயினால் ஏறக்குறைய 109 ஏக்கர்காட்டுப்பகுதி முற்றாக அழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நண்பகல் ஆரம்பித்த தீ மறுநாள்கால வரை சுடர்விட்டு எரிந்தவண்ணம் காணப்பட்டது. எனினும் அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்திற்கு எதுவிதமான சேதமும் ஏற்படவில்லை.

கந்தானைப் பொலீஸார் தீவிபத்து பற்றிப் பூரண விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்வியியல் கல்லூரிக்கு இடம் தெரிவு செய்தல்

யாழ்ப்பாணத்தில் கல்வியியல் கல்லூரி நிறுவுவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு நான்கு பேர் அடங்கிய அதிகாரிகள் குழு இன்று 16 ஆம் திகதி வர இருப்பதாகவும், இவர்களுடன் இப்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க். கந்தசாமியும் இணைந்து செயற்பட்டு காணியை தெரிவு செய்ய உள்ளதாகவும் செய்தி வெளிவந்துள்ளது.

தங்கள் பிள்ளைகள் இதுவரை காலமும், வவுனியா, மட்டக்களப்பு என்று அலைந்து திரியும் அவலநிலைக்கு இது முற்றுப்புள்ளி வைக்கும் என்று யாழ். மாவட்ட மக்கள்— பெற்றோர் மகிழ்ச்சி கொள்வர்.

கல்வி கற்பதற்கு பௌதீக சூழல் மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். இந்த வகையில் தண்ணீர் வசதி மிக முக்கிய இடம் வகிக்கும்.

மிகத்தூய்மையான, ஆழம் குறைந்த நிலப்பரப்பில் நிலத்தடி நீர் தாராளமாக கிடைக்கவேண்டும். அத்தோடு கோடை காலத்திலும், மழை காலத்திலும் ஈடுகொடுக்கக்கூடிய நிலம் தெரிவு செய்யப்படவேண்டியது மிக அத்தியாவசியமாகும்.

புவியியல் ரீதியாக, போக்குவரத்து செய்யக்கூடிய இடமாகவும், ஏனைய உயர் கல்வி நிறுவனங்களான, பல்கலைக் கழகம், உயர் தொழில் நுட்ப நிறுவனம், ஆசிரியர் கலாசாலைகள் போன்றவற்றுக்குச் சமீபமாகவே கல்விக் கல்லூரியும் அமைவதே உகந்ததாகும்.

கல்வியியல் கல்லூரியின் தேவையான துறைகளுக்கு பொருத்தமானவர்களை உடனடியாக நியமிக்க முடியாவிட்டாலும், மேற்கூறிய நிறுவனங்களில் கடமையாற்றும் அனுபவம் மிக்க விரிவுரையாளர்களின் சேவையை ஒப்பந்த அடிப்படையிலாவது சொற்பகாலத்திற்சேனும் பெறமுடியும்—

கடல் பிரதேசத்தை அண்மித்த இடங்களில் கட்டடங்கள் அமைப்பதும் அவற்றை பராமரிப்பதும் சாத்தியமற்றதாகும். அப்படி அமைந்தாலும் இரண்டொரு வருடங்களில் கட்டடங்கள் சேதமுறுவதையும், இரும்பு கடற்காற்றுக்கு துருப்பிடித்து அழிந்து போவதையும் நாம் அறிவோம். இதற்கு முன் உதாரணமாக வடமராட்சியில் மண்டான், துன்னாலை கிழக்கு போன்ற பிரதேசங்களில் கோடிக்கணக்கான ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வீடுகள் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் இரண்டொரு வருடங்களில் நீர் பெறுவதில் சிரமம் காரணமாகவும் கடும் வெயில் காரணமாகவும் — ஒரு குடியும் இல்லாமல் வேறு இடங்களுக்கு சென்றமையும், ஈற்றில் அக்குடியிருப்புக்கள் இயற்கையுடன் சங்கமமானதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

போதிய நிலம் சிரமமின்றிப் பெறமுடியும் என்ற ஒரே காரணத்திற்காக, பல நூற்றாண்டுகள் எமது சமூகத்திற்கு சேவை செய்யப்போகும் நிறுவனங்களை தூரநோக்கு, தீர்க்க தரிசனம் என்பன இல்லாமல் தீர்மானிக்கக்கூடாது. ஆரம்ப நடவடிக்கையில் ஈடுபடுபவர்களின் தெளிவான, சுயநலமற்ற சிந்தனையிலேயே இதன் எதிர்காலச் சிறப்பும், வளர்ச்சியும் நல்கியுள்ளது.

வி. எம். முத்துராஜா

அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலீஸ் கான்ஸ்டபிள்...

(முதலாம் பக்கத் தொடர்)
8–30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

28 வயதுடைய — 3 குழந்தைகளின் தாயாரான — மூன்று மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவரைச் சம்பந்தப்பட்ட கான்ஸ்டபிள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்த முயன்றார் என்றும் —

அதைத் தடுக்க வந்த அப்பெண்ணின் கணவரும், சிறியதாயாரும் கான்ஸ்டபிளினால் கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்றும் — இதனால் படுகாயமடைந்த மூவரும் யாழ். ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டனர் என்றும்— அறியவந்தது.

சிறிய தாயாரின் கூச்சலைக் கேட்டு அப்பகுதிக்கு அயலவர்கள் ஓடி வந்தனர் என்றும் —

இதனையடுத்துச் சம்பந்தப்பட்ட பொலீஸ்காரர் தப்பியோடி அயலில் இருந்த மரவள்ளித் தோட்டத்துக்குள் ஒளிந்துகொண்டார் என்றும் —

அங்கு கூடிய மக்கள் 'ரோச்லைட்'வெளிச்சத்தில் தேடிய போது அங்கு ஒளித்திருந்த பொலீஸ்காரரைக்கண்டு அவரைப் பிடிக்க முனைந்ததாகவும்—

தம்மைப் பிடிக்க முயன்றவர்களையும் அந்தப்பொலீஸ்காரர் கடுமையாகத் தாக்கியதாகவும்—அயலவர்கள் தெரிவித்தனர்.

எனினும் பத்துப்பதினைந்து பேர் ஒன்று சேர்ந்து அவரை மடக்கிப் பிடித்து தூண்ஒன்றில்கட்டியதாகவும் அச்சமயம் அவர் நையப் புடைக்கப்பட்டதாகவும் — மேலும் கூறப்பட்டது.

இதுபற்றிய தகவல்உடனே கோப்பாய்ப் பொலீஸுக்கு அறிவிக்கப்பட்டு, அவர்கள் சந்தேக நபரை அன்று இரவே சம்பந்தப்பட்ட இடத்துக்கு வந்து அழைத்துச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸ் பிரிவு விசாரணை நடத்துவதுடன், சம்பந்தப்பட்டவர்களின் வாக்கு மூலங்களையும் பதிவு செய்துள்ளது.

இந்த பாலியல் வன்முறை முயற்சிச் சம்பவத்துக்கு முன்னர் ஆடியபாதம் வீதியில் வைத்து படையினர் போல் தோற்றமளித்த ஒரு சிலரால் பொதுமக்கள் சிலர் தாக்கப்பட்டனர்.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டவர்களில் ஒருவர் டாக்டர் என அறியவந்தது. (இ–3-9-139)

## பாரதீய..,

(முதலாம் பக்கத் தொடர்)
கொள்ளப் போவதாகவும் ஜெயலலிதா கூறினார்.

பாரதீய ஜனதா மற்றும் தோழமைக் கட்சிகளின் தேசிய செயல் திட்டம் பற்றிய வரைபை ஜஸ்வர் சிங் கொண்டு வந்திருந்தார் எனவும் —

அதில் அ. தி. மு. க. கோரியவாறு தமிழக மக்கள் நலன் சார்ந்த முக்கிய அம்சங்கள் இடம் பெற்றுள்ளன என்றும் ஜெயலலிதா குறிப்பிட்டார். (இ-9)

HARY'S Institute
Kondavil East.
G,A.Q. மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்பு ஆரம்பம்
17 – 03 – 98 செவ்வாய்
4–30 p.m.
By: Mr. M. A. HARI
(B. A. Dip in Eng.)
அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்.
- DIRECTOR
(49990)

## எழுவைதீவு...

(முதலாம் பக்கத் தொடர்)
காப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

நயினாதீவு 'கால்வாய் வழியாக தடை 'செய்யப்பட்ட பகுதிக்குள் பிரவேசித்து எழுவைதீவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அந்த வள்ளத்தை அவதானித்த கடற்படைப்படகுகள் அந்த வள்ளம் மீது பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டதாகவும்—

இதனால் அந்த வள்ளம் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ–9)

## 5 படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)
படைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் நடந்த மோதலில் கைப்பற்றிய இந்தச் சடலங்களை விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் மல்லாவியில் வைத்து ஒப்படைத்திருந்தனர். (இ-164–3)

# மாங்குளம் பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்)
தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை ஓரளவு ஓய்ந்திருந்த சண்டை நேற்று மாலை 3 மணிக்குப் பின்னர் உக்கிரமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

மாங்குளம் நகரைக் கைப்பற்றுவதற்காக ஒலுமடு, மன்னகுளம், மூன்று முறிப்பு ஆகிய மூன்று முனைகளில் இருந்து கவச வாகனங்கள் சகிதம், வான்படை ஹெலிகள் பாதுகாப்பு வழங்க பெரிய எடுப்பில் சனிக்கிழமை காலை படையினர் முன்னேற்ற முயற்சியை ஆரம்பித்தனர்.

முன்னேறிய படையினர் மீது மோட்டார்கள், பீரங்கிகள் கொண்டு விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர்.

நேற்று முன்தினம் இரவு வரை தொடர்ந்த சண்டை நேற்றுக்காலை ஓய்ந்திருந்த போதும், நேற்று மாலை 3 மணிக்குப் பின் உக்கிரமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### அரச அறிவிப்பு

விடுதலைப் புலிகளின் பதுங்குகுழி வரிசை ஒன்றினைப் படையினர் நேற்றுக் கைப்பற்றினர் என்றும் —

இந்தத் தாக்குதலில் 18 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் —

மாங்குளம் நகரை நோக்கி முன்னேறும் துருப்புக்கள்மீது விடுதலைப் புலிகள் பலத்த மோட்டார் தாக்குதல்களை நடத்திய போதிலும் பாதுகாப்புப் படையினர் மனந்தளராமல் எதிர்த்துப்போராடிக் கொண்டு முன்னேறுவதாகவும் — பாதுகாப்பு அமைச்சின் தலைமையகம் அறிவித்துள்ளது.

### புலிகள் அறிவிப்பு

மாங்குளத்தைக் கைப்பற்றும் நோக்கோடு நேற்று முன்தினம் பிற்பகல் 1.50 மணியளவில் ராணுவத்தினர் மேற்கொண்ட மும்முனைகளிலான பெரும் முன்னேற்ற முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

ஒலுமடு, மன்னகுளம், மூன்று முறிப்பு ஆகிய மூன்று முனைகளிலும் இருந்து சரமாரியான ஷெல் வீச்சுக்களை நடத்தியவாறு படையினர் இம் முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டார்கள்.

விடுதலைப் புலிகள் முன்னேற முயன்ற படையினர் மீது நடத்திய கடுமையான மும் முனைத் தாக்குதலில் பெருமளவான இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தும் உள்ளனர்.

ஐந்து இராணுவத்தினரின் சடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். 12 துப்பாக்கிகள் உட்பட பல ஆயுத தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சண்டையில் எமது தரப்பில் மணியரசி (பத்திநாதர் மேரிஜென்சலா —முல்லைத்தீவு), சமர்வீரன் (சித்திரவேல் சசிகுமார் — திருமலை), புலநாதன்(கணபதிப்பிள்ளை சத்தியேஸ்வரன் — மட்டக்களப்பு), வெண்கோ (மணியம் மகேந்திரன் —கிளிநொச்சி) ஆகியோர் களப்பலியானார்கள்.

இப்படி 'புலிகளின் குரல்' தெரிவித்தது. இ–164-21-9-3)

## புலி...

(முதலாம் பக்கத் தொடர்)
ஒப்படைக்கப்படவிருக்கிறது.

திருகோணலையில் கடற்படையினர் இந்த சடலத்தைக் கைப்பற்றியதையடுத்து, இதுபற்றி செஞ்சிலுவைச் சங்க வடக்கு—கிழக்கு மாகாண இணைப்பாளர் சிவநாதன் கிஷோருக்கு தகவல் அனுப்பப்பட்டது.

அவர் திருகோணமலையில் இருந்து எடுத்து வந்த அச்சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 12 ஆம் திகதி கண்ணாட்டியில் நடந்த சம்பவம் ஒன்றில் உயிரிழந்த இளைஞனின் சடலமும் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது,

இவ்விரு சடலங்களும் இன்று செஞ்கிலுவைச்சங்கத்தால் எடுத்துச்செல்லப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றன. (இ–164–3)

## மேஜர்...

(முதலாம் பக்கத் தொடர்)
நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் மோட்டார் தாக்குதலால் 56ஆவது படையணியின் பிரிகேடியர் சிசிர விஜயசூரிய காயமடைந்தார். அவருடன் கப்டன அலதெனிய, லெப்டினன் சுனிமல், 2ஆம் லெப்டினன்ட் திலகசிறி ஆகியோரும்—

நேற்றைய சண்டையில் 56 ஆவது படையணியைச் சேர்ந்த பிரிகேடியர் ரி. டபிள்யூ பூரான், 55 ஆவது படையணியைச் சேர்ந்த பிரிகேடியர் சரத் பொன்சேகா ஆகியோரும் காயமடைந்தனர்.

வவுனியா கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியவின் பிரதம அதிகாரி பிரிகேடியர் சிசிர விஜயசூரிய என்று தெரிவிக்கப்பட்டது.

இரு நாள் சண்டையிலும் ஆட்லறி படையணியைச் சேர்ந்த மேஜர் பிரியாந்த ரணசிங்க உட்பட 12 படையினர் உயிரிழந்தனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இதில் ஆட்லறி படையணியைச் சேர்ந்த இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சண்டையில் காயமடைந்த 85 பேர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகவும் —

அபாய நிலையில் உள்ள படையினர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் —

ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

அதேநேரம் — புலிகளின் மோட்டார் தாக்குதலால் படையினரின் ஆட்லறிநிலை ஒன்று சேதம் அடைந்ததாக மற்றொரு செய்தி ஏஜென்சி தெரிவித்தது. (இ–3–21–164)

## வாஜ்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்)
அ. தி. மு. கவும் அதன் தோழமைக் கட்சிகளும் அடங்கிய 27 பேரின் ஆதரவுக் கடிதங்கள் நேற்று முன்தினம் வாஜ்பாய்க்கு அனுப்பப்பட்டதை அடுத்து நேற்று ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் வாஜ்பாயை அழைத்து அரசு அமைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

543 ஆசனங்கள் கொண்ட மக்களவையில் பாரதீய ஜனதாக் கட்சிக்கும் அதன் தோழமைக் கட்சிகளுக்கும் 264 ஆசனங்கள் இருக்கும்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் தெலுங்கு தேசம் கலந்து கொள்ளாதவிடத்து நம்பிக்கை வாக்கெடுப்பில் வாஜ்பாய் சுலபமாக வெற்றி அடைந்து விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய முன்னணியில் இடம்பெற்றிருந்த தெலுங்கு தேசம் கட்சிக்கு மக்களவையில் 12 ஆசனங்கள் உள்ளன.

ஆட்சி அமைப்பதற்கான அதிகாரப் போட்டியில் பாரதிய ஜனதாக் கட்சியையோ அல்லது காங்கிரஸ் கட்சியையோ நாம் ஆதரிக்கப் போவதில்லை என்று தெலுங்கு தேசம் தலைவர் சந்திரபாபு நாயுடு அறிவித்திருந்தார். (இ–3–9)

## தேர்தலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)
சன்துறையில் நடைபெற்ற சமயம், மத்திய போக்குவரத்து சபைத்தலைவர் ரமால் சிறிவர்த்தன, உதவிப் பொது முகாமையாளர் எஸ். ரீ. அதிகாரம், மேல் மாகாணபோக்குவரத்து நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் எம். ஏ. ரீ. ஜீப்ரி, எம். கே. ரஞ்சித், வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எல். பி. பலகல்லவின் பிரதிநிதியான பிரிகேடியர் திஸநாயக்க, வடபிராந்தியபோக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் ஆகியோர் பங்குபற்றினர்.

தேர்தல் பணிகளுக்கு எடுத்து வரப்பட்ட பஸ்களில் தரமான, நல்ல நிலையில் உள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொறியியல் பிரிவினால் தெரிவு செய்யப்பட்ட 40 பஸ்களும் —

உதிரிப்பாகங்களுக்காக இரு பஸ்களும் — இந்தவைபவத்தில் வைத்து வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளரிடம் கையளிக்கப்பட்டன.

உடனடியாக 10 பஸ்கள் கோண்டாவில் சாலைக்கு எடுத்து வரப்பட்டன.

அத்துடன் கொழும்பில் இருந்து மேலும் 45பஸ்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ரமால் சிறிவர்த்தன இந்த வைபவத்தில் தெரிவித்தார்.

வடபிராந்திய பாதுகாப்புஅதிகாரி மேஜர் ஜெனரல் எல். பி. பலகல்ல போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களையடுத்தே இந்த 40 பஸ்கள் வழங்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ–3)

உ

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈஸ்வர வருடம் பங்குனி மாதம் 5ஆம் நாள் (19–03–1998) வியாழக்கிழமை காலை 10.18 மணி முதல் 11.20 மணி வரையுள்ள இடப இலக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு. திருமதி சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக் குருக்கள் தம்பதிகளின் புதல்வன் ஜெயக்குமார் (பிரான்ஸ்) அவர்களுக்கும்



திரு. திருமதி சிவஸ்ரீ சோமஸ்கந்தக்குருக்கள் தம்பதிகளின் புதல்வி உமாதேவி அவர்களுக்கும்

திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் திருகோணமலை சிறி சமாது தங்க விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் திருமணத்திலும், அதனைத் தொடர்ந்து திருகோணமலை ''பிருந்தாவனம்'' கல்யாண மண்டபத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும், வரவேற்பிலும் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்,

சிவஸ்ரீ க. உருத்திரமூர்த்திக் குருக்கள்
(தம்பதிகள்)
திரு. திருமதி ரவிவர்மன் (பிரான்ஸ்)
திரு. திருமதி ரமேஸ்வரன் (பிரான்ஸ்)
திரு. திருமதி அருந்தவகுமார்
திரு. திருமதி சிவஸ்ரீ ஜீவசங்கர் குருக்கள்
உ. சுகாஜனன் B. A. (Hons)
உ. பரந்தாமன்

சிவஸ்ரீ வை. சோமஸ்கந்தக் குருக்கள்
(தம்பதிகள்)
திரு. திருமதி அருந்தவகுமார்
சோ. சத்தியநாதன் B.Sc, P.G.D.C.S.
சோ. சிவகுமாரன் B. Sc, P,G.D.C.S.

(இரு வீட்டார் அழைப்பு)

வீரபத்திரர் கோயிலடி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

இல. 471, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.
தொலைபேசி இலக்கம்: 026 - 20463

தகவல்:
சி. சுசீந்திரன்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
(சி/3129)

இப்பத்திரிகைநியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org